இது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஐப்பசி 29 வியாழக்கிழமை 14.11.2019 | கதிர் 09

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்துக்குரிய காலம் இன்று விடிகாலை 12.01 மணிக்கு முடிவடைந்து விட்டது.

இனிமேல் பிரசுரமாகும் செய்திகளுக்குக் கட்டுப்பாடு உள்ளது. நேற்றைய பிரசாரக் கூட்டங்கள் பற்றிய செய்திகளை பக்கம் 02





நேற்று கிட்டுப்பூங்கா கூட்டத்தில்...

# சஜித் வெற்றி பெற்றால் உள்ளக சுயநிர்ணயம்!

## இல்லையேல் வெளிப்புற சுயநிர்ணயத்தை நாடும் நிலை வரும் என்கின்றார் சம்பந்தன்

- எஸ்.நிதர்ஷன் -

நல்லூர், நவம்பர்14

சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருக்கின்ற முறையில் எங்களுக்கு அதியுச்சப்பட்ச அதிகாரப் பகிர்வு அவசியம். நாம் அதற்காகவே வாக்களிக்கப் போகிறோம். அதியுச்ச அதிகாரப் பகிர்வு ஏற்பட்டால் எமது மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பார்கள். ஆனால் தொடர்ச்சியாக உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்படும் நிலைமையே வருமானால் அந்த மறுப்பின் காரணமாக நாம் வெளிப்புற சுயநிர்ணய உரிமையை நாட வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதை சம்பந்தப்பட்டோர் உணர வேண்டும்.

– இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

பக்கம் 03

## மருந்தே இல்லாத நோய் சிவாஜிலிங்கத்துக்கு!

### நல்லூரில் மாவை எம்.பி. கிண்டல்

யாழ்ப்பாணம், நவ. 14

தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் வகையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அளவுக்கு சிவாஜிலிங்கத்துக்குத் தேர்தலில் போட்டியிடும் நோய் உள்ளது. அதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லை என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் பக்கம் 08

## சிவாஜிலிங்கத்துக்கு வாக்களிப்பது தமிழினத்துக்கு செய்யும் துரோகம்!

### நல்லூரில் தெரிவித்தார் சம்பந்தன் எம்.பி.

– எஸ். நிதர்ஷன்–

யாழ்ப்பாணம், நவ. 14

எமது வாக்குகள் பிரிந்தால் நாங்கள் பலவீனமாவோம். ஆனபடியால் சிவாஜிலிங்கம் இப்போதும் இந்தப் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளலாம். அவ்வாறு விலகிக் கொள்ளாவிட்டால் தமிழ் மக்கள் எவரும் அவருக்கு வாக்களிக்கக்கூடாது. அவருக்கு வாக்களிப்பது தமிழினத்துக்குச் செய்யும் பாதகமான செயல் என்பதை உணர்ந்து ஒருவரும் வாக்களிக்காமல் அவரை முற்றாகத் பக்கம் 02

## சித்த வைத்தியர் வீட்டுக்கு தீ வைத்த அடாவடிக் கும்பல் கூண்டோடு கைது!

### கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள் என்கிறது பொலிஸ்



யாழ்ப்பாணம், நவ. 14

யாழ்ப்பாணம்ஆனைப்பந்தியில் உள்ள சித்த வைத்தியர் ஒருவரின் வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஹைஏஸ் வாகனத்துக்கு தீவைத்துச் சேதம் விளைவித்தமை பக்கம் 03

## கூட்டமைப்பின் கூட்டத்தில் குழம்பம் விளைவித்தவர் கைது

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்ப்பாணத்தில் சஜித் பிரேமதாஸவை ஆதரித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பக்கம் 03

## ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் சனி நள்ளிரவு முதல் வெளிவரும்

கொழும்பு, நவ. 14

எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ள 8ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் தொடர்பான முதலாவது முடிவை பெரும்பாலும் அன்றையதினம் நள்ளிரவு 12 மணிக்கு பக்கம் 02

## கூட்டமைப்பின் பிரசார கூட்டத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டுக் கவனவீர்ப்பு!

### நேற்று நல்லூரில் நடைபெற்றது




யாழ்ப்பாணம், நவ. 14

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக நல்லூரில் பக்கம் 03



பிள்ளைகளின் வாழ்க்கைக்காக
அனைவரையும் வாக்களிக்கச் செய்வது
தாய்மார்களின் பொறுப்பாகும்

# கூட்டமைப்புடன் பேச மறுக்கும் மொட்டுக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழர்கள் நிலை என்னவாகும்?

## கேள்வி எழுப்புகின்றார் சுமந்திரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 14

**தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவது இழுக்கு என்பதுபோல் எங்களுடன் பேசுவதற்கு மறுத்து – சிறுபான்மை மக்களின் வாக்குகள் தேவையில்லை எனக் கூறி – சிங்கள – மக்கள் மத்தியில் கீழ்த்தரமாக இனவாதத்தைக் கக்கும் மொட்டுக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நிலைமை என்னவாகும் என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.**

**– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்.**

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானம் மிகச் சரியானது. தமிழ் மக்களின் நாடித்துடிப்பைப் பார்த்து, சீராக ஆராய்ந்து எடுக்கப்பட்ட தீர்மானமாக அது இருக்கிறது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கும் முன்பதாக யார் வேட்பாளராக நியமிக்கப்படுவார் என்பதை ஆராய்ந்து அவ்வாறானவர்களுடன் நாங்கள் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தினோம்.

குறிப்பாக ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபாயவைச் சந்தித்துப் பேசினோம். அதில் அரசியல் விடயங்கள் குறித்து பேசப்பட்டபோது தனது அண்ணனுடன் பேசுமாறு அவர் கூறினார். நாங்கள் உத்தியோகபூர்வமான பேச்சுக்கும் அழைத்தோம். ஆனால் அதனை மறுதலித்தார்கள். தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற எங்களுடன் பேசுவதை இழுக்காகக் கருதினார்கள்.

சிறுபான்மை மக்களின் வாக்குகள் தங்களுக்குத் தேவையில்லை எனக் கூறினார்கள். சிங்கள மக்களிடம் கீழ்த்தனமான இனவாதத்தைக் கக்குவதற்காக எங்களுடனான பேச்சை மறுதலித்தார்கள். எங்களுடன் பேசுவதை இழுக்காக காட்டினார்கள். இவ்வாறான இனவாத அடித்தளத்தைக் கொண்டதே மொட்டுக்கட்சி. இவர்கள் ஆட்சிக்கு வந்தால் என்னவாகும் என்பதைத் தமிழ்மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்கள் இருவரில் ஒருவர் மட்டுமே நிச்சயமாக ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்படுவார் என்பதை நன்றாக அறிந்திருந்தும் பலர் போட்டியிடுக்கின்றார்கள். அவர்களில் மனநோயாளிகள், பணத்துக்காகப் போட்டியிடுகிறவர்கள், எதிர்கால அரசியல் நலன்களுக்காக போட்டியிடுகிறவர்கள் இருக்கிறார்கள்.

மறுபக்கம் தேர்தலைப் புறக்கணிக்கவேண்டும் எனக் கூறுகிறார்கள். தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்தால் இலங்கைக்கு ஜனாதிபதி கிடைக்கமாட்டாரா? படு முட்டாள்தனமான சிந்தனை அது. எங்கள் மக்களிடம் இருக்கும் மிக பலமான ஆயுதம் வாக்குரிமை. அதனைக் கைவிடுங்கள் எனக் கேட்கிறார்கள்.

ஆனாலும் எங்களுடைய மக்கள் மிகப் புத்திசாலிகள். நாங்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினமாக இருந்தாலும் கூட எங்கள் வாக்குகளே தீர்மானிக்கும் சக்தி. ராஜபக்ஷ குடும்பத்திலேயே மிக குரூரமானவர் கோட்டபாய. ஆனால் சஜித் எமக்கு வீடுகளை கட்டிக் கொடுத்திருக்கின்றார். எமக்குப் பாதகமான எதனையும் இது வரை அவர் செய்யவில்லை. இனவாதமாகச் சித்திரிக்கப்படும் எனத் தெரிந்தும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமக்கான சில விடயங்களை அவர் சோத்துள்ளார்.

ஆனாலும் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளதைச் செய்வாரா என கேட்கலாம். ஆனால் சொல்வதற்குத் துணிந்த ஒருவராக உள்ளார் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நிபந்தனையற்ற ஆதரவு கொடுக்கிறோம் எனச் சொல்கிறார்கள். அவ்வாறு சொல்கிறவர்கள் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தை படிக்கவில்லை.

ஏனென்றால் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எங்கள் மக்களின் நலன்சார்ந்து குறிப்பிடப்பட்டிருக்கும் பல விடங்கள் நாங்கள் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் உருவானவை என்பதை உணரவேண்டும். சிலர் அரசியல் தெரியாமல் அறிக்கை விடுகிறார்கள்.

நல்லாட்சியில் எதுவும் நடக்கவில்லை எனக் கூற முடியாது. எதுவும் முழுமையாக நடக்கவில்லை என்பது சரி. ஆனால் எதுவுமே நடக்கவில்லை என்பது பொய்.

இனிமேல் விடுவிக்கப்படச் சாத்தியமில்லை என்ற காணிகள் விடுவிக்கப்பட்டன. அரசியல் கைதிகள் பலர் விடுதலை செய்யப்பட்டனர். காணாமல்போனவர்கள் அலுவலகம் சட்டமூலத்தை பலத்த போராட்டத்தின் மத்தியில் கொண்டு வந்தோம். மக்கள் ஆணையின் அடிப்படையில் எமக்குள்ள பொறுப்பை கருதி தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என கேட்ட எமக்கு அதை நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்பும் உள்ளது. அது எங்களின் பொறுப்பு என்பதைப் பகிரங்கமாக கூறுகிறோம்.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அது எப்படி நடந்தது? ஆயுதம் இல்லை. போராட்டம் இல்லை. எப்படி சாத்தியம்? மேலும் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாவிடம் செய்தியாளர் ஒருவர் திரும்பத் திரும்ப கேட்கிறார் சரணடைந்தவர்கள் எங்கே? என்று. ஆனால் அதற்கு பதில் வரவில்லை. கோழைபோல் இருந்து சிரித்து மழுப்புகிறார் இராணுவ தளபதி மீது பழிபோடுகிறார். ஆனால் தெற்கில் தான் போர் வீரன் என்றும், தான் மாவீரன் என்றும் கூறுகிறார்–என்றார். (ஐ–07)



### சிவாஜிலிங்கத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்ப்பது உங்கள் எல்லோரதும் கடமை.

–இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஒரு தமிழ் வேட்பாளர் ஏன் கேட்கிறார். அவர் கேட்பதன் மூலமாக தமிழ் மக்களுக்கு ஏற்படப் போகின்ற நன்மை என்ன?. அவருக்கு அளிக்கப்படும் வாக்குகள் தமிழ் மக்களுக்கு எதிராக அதாவது தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்கின்றவருக்கு அளிக்கும் வாக்குகளாகத் தான் கருதப்படும்.

எங்கள் மக்கள் மத்தியில் இதனைக் கூறவேண்டியது எமது கடமை. நாங்கள் தனிப்பட்ட முறையில் உங்களை எதிர்க்கவில்லை. ஆனால் மக்களுக்கு மாறாக மக்களுக்குப் பாதகமாகச் செயற்படக் கூடிய ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு இந்தத் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவது உதவும்.

இது எமது மக்களுக்கு விரோதமான ஒரு செயல். அதைச் சுட்டிக் காட்டவேண்டியது எமது கடமை. நீங்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதன் மூலமாக கோட்டாபயவைத் தவிர வேறு யார் நன்மை பெறப் போகின்றனர். நீங்கள் வெல்லப் போவதில்லை இதனால் நீங்கள் எதனையும் அடையவும் போவதில்லை.

ஆனால் நீங்கள் தமிழ் வாக்குகளைப் பிரித்து பிரேமதாஸவுக்கு வருகின்ற வாக்குகளைக் குறைத்தால் அது கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழிவகுக்கும். அவருக்கான ஒரு சந்தர்ப்பத்தை உங்களது செயற்பாடு ஏற்படுத்தும். இதை நீங்கள் உணர்ந்து போட்டியிடுவதை மறுபரிசீலனை செய்து நீங்கள் போட்டியிடவில்லை என்று மக்களுக்கு அறிவிப்பது உகந்த தாக கருதுகின்றேன்–என்றார். (ஐ–07)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

வெளியிடக்கூடியதாக இருக்கும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் தலைமையில் நேற்று மாலை அரச தகவல் திணைக்களத்தில் செய்தியாளர் மாநாடு நடைபெற்றது.

செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த ஆணைக்குழு தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேர்தல் முடிவுகளில் தபால் மூல வாக்குகள் தொடர்பான பெறுபேறுகளை சனிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு வெளியிடக் கூடியதாக இருக்கும்.

தேர்தல் விதிமுறைகளை மீறிய ஊடகங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. தேர்தல் முடிந்தவுடன் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன், இவ்வாறு இனங்காணப்பட்ட ஊடகங்களுக்கு தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக வழங்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய அச்சுப்பதிப்பிலோ அல்லது ஒலி, ஒளி பரப்பிலோ ஊடகங்கள் வெளியிடலாம். அதற்கும் கட்டுப்பாடு உண்டு.

ஆகவே, உள்வீட்டு விவகாரங்கள் என்று எதையாவது நான் வாசகர்களிடம் பகிரப்போக, அது சட்டப்பிரச்சினையாகி வீண் வம்பாகிவிடும். அதனால் அரசியலை ஒட்டிய விடயங்களைக் கொஞ்சம் அடக்கிவாசிக்கவே விரும்புகிறேன்.

இப்போது தேர்தலில் நிற்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரிடமும் எழுத்து மூலம் ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்கின்றது நாட்டின் மிக வலிமையான இலங்கை மருத்துவச் சங்கம்.

நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றிலும் உடலியல், உளவியல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் வன்முறைப் பாதிப்பை ஏற்படுத்தும் பகிடிவதை (றாகிங்) தொடர்வதாகச் சுட்டிக் காட்டியுள்ள அச்சங்கம், ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரும் இந்த மிருகத்தனப் போக்குக்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளது.

அது மட்டுமல்லாமல், பதவிக்கு வந்ததும் இந்தக் கொடூரத்தை அடியோடு ஒழிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்போம் எனக் கங்கணம் கட்டி, திட சங்கற்பத்துடன் பணிபுரிவோம் எனப் பிரதிக்ஞை செய் வேண்டும் என்றும் அந்த அமைப்புக் கோரியுள்ளது.

நாட்டின் புதிய ஜனாதிபதி அதனைச் செய்வரா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

★ ★ ★

தேர்தலில் இருந்து விலகிக் கொள்ளுமாறு சிவாஜிலிங்கத்திடம் சம்பந்தன் விநயமாக வேண்டிக் கொண்டமையை அடுத்து இதுவரை காலமும் சிவாஜிக்கு திருகோணமலையில் இருந்தபடி பின்புல ஆதரவைக் கொடுத்து வந்த ஒரு முக்கிய அமைப்பு, சம்பந்தனின் கோரிக்கைக்கு செவிசாய்க்கும் படி சிவாஜிக்கு அழுத்தம் கொடுத்ததாகத் தெரியவருகின்றது.

திருகோணமலையை இயங்கு தளமாகக் கொண்டு செயற்படும் தமிழர் ஜனநாயகப் பேரவையே அது. பல்வேறு சமூக அமைப்புக்களின் கூட்டு இயக்கம் அது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பே இந்தத் தடவை தமிழரின் பொது வேட்பாளராக இத்தேர்தலில் தாம் குதிக்கின்றார் என சிவாஜி அறிவித்த போது அவருக்கு பேராதரவு தந்து நின்றது.

இந்த அமைப்பின் ஏற்பாட்டில்தான் அல்லது பின்புலத்தில்தான் – சிவாஜியின் தேர்தல் விஞ்ஞாபனமும் கூட திருகோணமலையில் வெளியிடப்பட்டது.

இந்த அமைப்பின் முக்கியஸ்தர்களை சம்பந்தன் அழைத்துப் பேசினார். நிலைமையின் விபரீதத்தை விளங்கப்படுத்தினார். சிவாஜி போட்டியிலிருந்து விலக வேண்டியமையின் அவசியத்தையும் அவசரத்தையும் தெளிவுபடுத்தினார்.

அந்த அமைப்பின் முக்கியஸ்தர்கள் சுமந்திரனனுடம் பேசினர்.

இதனையடுத்து சிவாஜியை நேரில் சந்தித்துப் பேசி. சம்பந்தன் – சிவாஜி சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதற்காக அந்த அமைப்பின் உயர் மட்டப் பிரமுகர்கள் நேற்று திருமலையிலிருந்து யாழ். வந்திருந்தனர். இங்கு யாழ்ப்பாணத்தில் வைத்து சம்பந்தனையும், சுமந்திரனையும் மீண்டும் சந்தித்துப் பேசிய அவர்களினால், ஏனோ இதுவரைத் தாம் ஆதரவு கொடுத்து ஊக்கிவித்த சிவாஜியைச் சந்திக்க முடியவில்லையாம். பல தடவைகள் முயற்சித்துப் பார்த்து விட்டுத் தமது இயலாமையை சம்பந்தன் – சுமந்திரனிடம் கூறிய பின்னர் திருகோணமலைக்கு நேற்றிரவு அவர்கள் புறப்பட்டனர்.

சிவாஜிலிங்கத்துக்காக ஆதரவு தேடும் பிரசாரத்தை நேற்றுடன் முடிவுக்குக் கொண்டு வந்த அவர்கள் தங்கள் அமைப்பினரிடம் ஜனநாயகத்தைக் காப்பாற்ற பொருத்தமான வேட்பாளர் யாரோ அவருக்கு வாக்கைப் போடுகள் என்று தாங்கள் கோரவிருக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

சிவாஜிக்கு இது திருகோணமலையில் உறவுத் துண்டிப்புத் தான்...!

–மின்னல்–

## சஜித் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையின் ஜனாதிபதியாகப் பலர் இருந்திருக்கின்றார்கள். இப்போது புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடக்கிறது. இந்த ஆறாவது ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸவா அல்லது கோட்டாபய ராஜபக்ஷவா என்ற போட்டி நிலவுகிறது. இதில் கோட்டாபய ராஜபக்ஷ வந்தால் இந்த அரசில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கருமங்கள் தடைப் படும்.

அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக கூடத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கோட்டாபய ராஜபக்ஷ எதனையும் கூறவில்லை. அரசியல் தீர்வு சம்பந்தமாக எவ்வளவோ கருமங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவரது அண்ணனின் தலைமையின் கீழ் கூட கருமங்கள் நடைபெற்றிருந்தன. ஆனால் அது குறித்தும் கூட கோட்டாபய எதனையும் பேசவில்லை.

ஆனால், சஜித் பிரேமதாஸ நாட்டிற்கு ஓர் புதிய அரசியல் சாசனம் ஏற்படுத்தப்படுமென்று கூறுகின்றார். அதே போல நாடாளுமன்றத்தில் இவ்விடயம் தொடர்பாக இதுவரைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட கருமங்களை நான் தொடருவேன் என்றும் கூறுகின்றார். அதியுச்ச அதிகாரப் பகிர்வாக ஒரு தீர்வை ஏற்படுத்துவேன் என்றும் கூறுகின்றார்.

அவருக்கும் எங்களுக்கும் தொடர்பு இருந்தது. அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல விடயங்களைக் கூறியிருக்கின்றார். அவற்றை நிறைவேற்ற வேண்டும். நியாயமான அரசியல் தீர்வு வேண்டும். ஒருமித்த நாட்டிற்குள் – பிரிக்கப்படாத நாட்டிற்குள் – அதே சமயத்தில் வெவ்வேறு மக்களுடைய தனித்துவத்தை அங்கீகரித்து, அதியுச்ச அதிகாரப் பகிர்வின் மூலமாக நியாயமான அரசியல் தீர்வை ஏற்படுத்த வழியுண்டு.

சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டால் இதில் பலவற்றைச் செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆனால் அவர் தெரிவு செய்யப்படாவிட்டால் இவை எவையும் நடைபெறப் போவதில்லை என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அவருடைய (கோட்டாபயவின்) அண்ணனின் காலத்தில் நாங்கள் எவ்வளவோ முயற்சி எடுத்தோம். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காணப் பல முயற்சிகள் எடுத்திருந்தாலும் ஒன்றும் கைகூடவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷவோ அல்லது சஜித் பிரேமதாஸவோ என்ற கேள்வி மாத்திரமல்ல, அரசியல் தீர்வை ஏற்படுத்தக் கூடிய முயற்சி நடைபெறுமா இல்லையா என்பதும் கூட முக்கியமானது. தமிழ் மக்களுக்கு எது முக்கியமானது என்பதை உணர்ந்து நாங்கள் இந்தத் தேர்தலில் தீர்மானிக்க வேண்டும். நாங்கள் ஒருமித்து, ஒற்றுமையாக, ஒன்றாக நிற்கின்றோம் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகளின் மூலமாக உலகத்திற்கு நாங்கள் அறியச் செய்ய வேண்டும். அதுதான் எங்கள் கடமை. அந்தக் கடமையிலிருந்து நாங்கள் தவற முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையால் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தின் அடிப்படையில் ஒரு நாட்டில் ஆட்சி முறையை அமைப்பதற்கு – அதை நடைமுறைப் படுத்துவதற்கு – ஆட்சி அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு – ஜனநாயக ரீதியாக நாட்டில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திற்குத்தான் உரிமையுண்டு. ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்படும் அரசாங்கம் மக்களுடைய இறைமையை, மக்கள் சார்பாக பயன்படுத்தி அந்த இறைமையான அதிகாரத்தின் அடிப்படையில்தான் ஆட்சி புரிய வேண்டும்.

56 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தலிலும் எமது மக்கள் எமக்கு வாக்களித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் எந்தவிதமான அரசியல் தீர்வு வேண்டும், எந்தவிதமான ஆட்சி வேண்டுமென்று சொல்லியுள்ளனர். ஆனால் அவை மீறப்பட்டிருக்கின்றன. இம்முறையும் நாங்கள் வாக்களிக்கின்ற பொழுது என்ன விதமான ஆட்சி முறை எங்களுக்கு வேண்டும் என்பதை வெளிப்படுத்தப் போகின்றோம்.

வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருக்கின்ற வகையில் எங்களுக்கு ஓர் ஆட்சி முறை தேவை என்ற கருத்தை வலியுறுத்தி அதை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் நாங்கள் வாக்களிக்கப் போகின்றோம். அதன் மூலமாக எமது உள்ளக சுயநிர்ணய உரிமையை நாங்கள் பெறக்கூடிய நிலைமையை நாங்கள் உருவாக்குகின்றோம். அதியுச்ச அதிகாரப் பகிர்வு ஏற்பட்டால் அந்தப் பிரதேசத்து மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பார்கள்.

ஆனால் தொடர்ச்சியாக உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுமாக இருந்தால், அந்த மறுப்பின் காரணமாக, வெளிப்புறச் சுயநிர்ணய உரிமை சர்வதேசச் சட்டத்தின் அடிப்படையில் உருவாகுவதற்கு இடமுண்டு.

ஆனபடியால் நீங்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கின்ற பொழுது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக மாத்திரம் நீங்கள் வாக்களிக்கவில்லை. இந்தத் தேர்தலில் நீங்கள் வாக்களிக்கின்ற பொழுது என்னவிதமான ஆட்சி அதிகாரம் இந்த நாட்டில் ஏற்பட வேண்டும் என்று தீர்மானிக்கவும் வாக்களிக்களிக்க வேண்டும். இதற்மைய சஜித் பிரேமதாஸ என்ற ஒரு வேட்பாளர் இது தொடர்பில் கூறியிருக்கின்றார்.

அவரை ஆதரித்தால் அது தான் எமக்கு வேண்டும், அதைத் தான் நாங்கள் கேட்கின்றோம், வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அதைத்தான் ஆதரித்திருக்கின்றார்கள் என்ற செய்தி இந்த நாட்டிற்குள் மாத்திரமல்ல, சர்வதேச சமூகத்திற்கும் செல்ல வேண்டும்.

வேறு சில அரசியல்வாதிகள் – ராஜபக்ஷவிடம் பதவி பெற்றவர்கள் – பதவி பெற நினைப்பவர்கள் – ராஜபக்ஷதான் வருவார், ஆகையினால் அவரை ஆதரிக்கிறோம், அவருக்கு வாக்களிக்க வேண்டுமென்று கேட்கின்றனர். அவ்வாறு அவர் வந்தால் பதவி கிடைக்குமென்று பிச்சை கேட்கின்றனர். அவ்வாறு பிச்சை கேட்க முடியாது.

நாம் எமது உரிமைகளை நியாயத்தின் அடிப்படையில் – நீதியின் அடிப்படையில் – கேட்கின்றோம். உங்களுக்குப் பதவி வேண்டுமென்றால் நீங்கள் பதவிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். தமிழ் மக்கள் உங்களுக்கு வாக்குகளை அளிக்கத் தேவையில்லை. அவர்கள் வாக்களிக்கும் நிலைமைக்குத் தள்ளப்படக் கூடாது. அந்த யதார்த்தத்தை தமிழ் மக்கள் புரிந்த கொள்ள வேண்டும்.

நடந்த தேர்தல் முடிவுகளைப் பார்க்கின்ற போது தமிழ் மக்கள் எங்களுக்கே அனைத்து இடங்களிலும் வாக்களித்திருக்கின்றனர். அதே நேரம் டக்ளஸ் தேவானந்தா செய்த உதவிகளின் நிமித்தம் அவருக்கும் சில வாக்குகள் விழுந்திருக்கின்றன. டக்ளஸ் தேவானந்தா உங்களுக்கு உதவி செய்திருந்தால் நீங்கள் அவருக்கு வாக்களிக்கலாம். அவருக்காகக் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வாக்களிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. இந்த விடயத்தை மிகத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால் இது, எமது மக்களின் அடிப்படை உரிமைகளுடன் – மக்களின் எதிர்காலத்துடன் – எங்கள் எதிர்காலச் சந்ததியுடன் – தொடர்புடைய விடயம். ஆகையினால் நாங்கள் இந்தவிதமான காரணங்களுக்காக எங்கள் கருமங்களை நிறைவேற்றுவதில் தவறிழைக்க முடியாது. விலைபோக முடியாது. அதில் நாங்கள் உறுதியாக இருக்க வேண்டும். ஆனபடியால் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வாக்களிக்கக் கூடாது.

ஆனாலும் தாங்கள் செய்த உதவி அல்லது தமக்காக, கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வாக்களிக்க வேண்டுமென்று கோருவதை இவர்கள் நிறுத்த வேண்டும். அவ்வாறு வாக்களிப்பதை நீங்கள் நிராகரிக்க வேண்டும்.

அவ்வாறு கேட்பவர்களிடம் நீங்கள் உதவி செய்திருந்தாலும் கோட்டாபயவிற்கு ஆதரவளிக்கும்படி நீங்கள் கேட்க வேண்டாம் என்று சொல்லுங்கள். கோட்டபயவிற்கு இந்த மக்களை வாக்களிக்க விடக் கூடாது.

ஆக மஹிந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற துன்பங்கள், துயரங்கள் எல்லோருக்கும் தெரியும். கடந்த 2005 ஆம் ஆண்டு தேர்தலில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. அவ்வாறு வாக்களிக்காததால் மஹிந்த ராஜபக்ஷ வந்தார். ஆனால் தமிழ் மக்கள் வாக்களித்திருந்தால் அவர் வென்றிருக்க முடியாது. அவ்விதமான பிழையை நாங்கள் மீண்டும் செய்யக் கூடாது. நாங்கள் எல்லோரும் வாக்களிக்க வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக ஒருமித்து வாக்களிக்க வேண்டும்.

அவ்வாறு வாக்களித்தால் நாங்கள் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது. அதனூடாக எமது அரசியல் பயணத்தையும் எமது மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, பலவிதமான அபிவிருத்திகளைச் செய்யலாம். இந்த வாக்குகளினால் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் திட்டங்களைத் தீட்டி, நட்பான அந்த அரசாங்கத்துடன் அந்தக் கடமைகளை நிறைவேற்றி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களை நாங்கள் தூக்கி நிறுத்தி, கருமங்களை நிறைவேற்ற முடியும். ஆகவே, நாம் கோருகின்ற சாதகமான ஆட்சி வருமாக இருந்தால் அதை நாங்கள் செய்விக்கலாம். அதைச் செய்விப்போம். அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் ஜெயவர்தனா, பிரேமதாஸ, சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன என இப்போது சஜித் பிரேமதாஸ என நீண்ட பயணம் தொடர்கிறது.

நாங்கள் 88 ஆம் ஆண்டு தொடக்கம் முப்பது வருடங்களுக்கு மேலாக நாங்கள் சேர்ந்து பயணித்திருக்கிறோம். அது ஒரு முழுமைக்கு வர வேண்டும். அவ்வாறு முழுமைக்கு வரும் நிலைமைக்கு நாங்கள் வந்திருக்கிறோம்.

ஒவ்வொரு ஜனாதிபதியின் காலத்திலும் பல முன்னேற்றகரமான கருமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்று, அதை நாங்கள் நிறைவேற்ற வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் கையில் இருக்கிறது. அதை நாங்கள் இழக்கக் கூடாது. நாங்கள் எதிர்பார்க்கும் வெற்றியைப் பெறச் சந்தர்ப்பம் உள்ளது. அது நடைபெறும். அது நடைபெறக் கூடிய வாய்ப்பு உள்ளது. அதற்கு உங்கள் வாக்கு முக்கியம். அதற்காக நீங்கள் எல்லோரும் வாக்களிக்க வேண்டும். அன்னம் சின்னத்திற்கு வாக்களித்து எமது மக்களின் விமோசனத்திற்கு நீங்கள் எல்லோரும் உதவ வேண்டும். – என்றார்.

## சித்த வைத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்ட 5 பேரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

இரு அடுக்கு மாடி வீட்டில் உரிமையாளரான வைத்தியர் மேல் தளத்தில் வசிக்கிறார். கீழ் தளத்தில் மருந்தக உரிமையாளர் வாடகைக்கு வசிக்கிறார். இரு தரப்புக்கும் இடையே ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக வைத்தியரை அச்சுறுத்தும் வகையில் வாடகைக்கு இருக்கும் மருந்தக உரிமையாளர் கூலிக்கு ஆள் வைத்து இந்த அடாவடியில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி, குருநானந்த சுவாமி லேனில் இந்தச் சம்பவம் கடந்த 7ஆம் திகதி இரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்தவை வருமாறு:-

சித்த வைத்தியரின் வீட்டின் கீழ்தளம் மருந்தக உரிமையாளர் ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் வாடகைக்குப் பெற்ற வீட்டை நாளாந்த வாடகைக்கு மீள வழங்கி வருகிறார். இந்த மீள வாடகைக்கு விடும் பணியை மருந்தக உரிமையாளரின் மனைவி முன்னெடுக்கின்றார்.

இந்த நிலையில் சித்த வைத்தியரின் மகனுடன் மருந்தக உரிமையாளருக்குச் சில முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் அந்த வீட்டிலிருந்து வேறு இடத்துக்குச் செல்லாமல் வைத்தியரையும் அவரது மகனையும் மிரட்டுவதற்கு மருந்தக உரிமையாளர் திட்டமிட்டுள்ளார்.

அதற்காக ஓட்டோச் சாரதி ஒருவர் ஊடாக நாவற்குழி, கைதடி உள்ளிட்ட இடங்களைச் சேர்ந்தவர்களைக் கூலிக்கு அமர்த்தி வைத்தியரின் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹைஏஸ் வாகனத்துக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்த அடாவடியால் ஹைஏஸ் வாகனம் முற்றாக எரிந்து நாசமாகியதுடன் வீட்டின் முன்பக்கம் தீயால் சேதமடைந்துள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீ அணைப்புப் படையே தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தது.

வைத்தியரின் முறைப்பாட்டையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பின்னணி கண்டறியப்பட்டு மருந்தக உரிமையாளர் உட்பட 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் 5 பேரும் விசாரணைகளின் பின்னர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் ஐவரையும் வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது – என்றனர். (ஐ–07)

## கூட்டமைப்பின் பிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய பிரசாரக் கூட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்றைய இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை உடனடியாக அங்கிருந்து வெளியேறக் கோரியும், தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கத்தை ஆதரிக்கக் கோரியும் மேற்படி கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் வவுனியாவிலிருந்து வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்கச் சொல்லாதே, போர்க்குற்றவாளிகளைப் பாதுகாக்காதே, இனத்தை விற்று அரசியல் செய்யாதே, இலஞ்சம் வாங்கி வாக்களிக்கச் சொல்லாதே, பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்க இணக்கம் வெளியிட்டவர்களே வெளியேறு, தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கத்துக்கு வாக்களிப்போம் உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியும், பல சுலோகங்களைத் தமது கைகளில் தாங்கியும் கடும் எதிர்ப்பில் ஈடுபட்டனர். (ஐ–07)

## கூட்டமைப்பின் கூட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

குழப்பம் விளைவிக்க முனைந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை நல்லூர் கிட்டுப் பூங்காவில் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரசார கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வந்த நபர் ஒருவர் தகாத வார்த்தைகளைப்பேசி அங்கிருந்தவர்களை முகம் சுளிக்க வைத்தார்.

அவருடைய அநாகரிகசெயற்பாட்டை அடுத்து அங்கிருந்த பொலிஸார் அவரை எச்சரித்துள்ளனர். பொலிஸாருடன் முரண்பட்ட அவர் கூட்டத்தில் இருந்து புறப்பட்டு வெளியே சென்றார்.

அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்ட அவரை கிட்டுப்பூங்காவிற்குப் பின்புறமாக வைத்து வழிமறித்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தினர். இதன் போது அந்நபர் மதுபோதையில் இருந்தமை கண்டறியப்பட்டது.

உடனடியாக அவரைக் கைது செய்த பொலிஸார் அவரின் மோட்டார்சைக்கிளையும் தடுத்துக் கைப்பற்றினர்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஆர்ப்பரிக்கும் பேரினவாதம்

தேர்தல் என்றால் பணம் பாதாளம் வரைப் பாயும். அதுவும் ஜனாதிபதித் தேர்தல் என்றால் சொல்லவும் வேண்டுமா?

கொழும்பிலிருந்து வெளியாகும் அரசியல்வாதி ஒருவருக்கு சொந்தமான ஆங்கில மற்றும் சிங்களத் தினசரிகள் மஹிந்த தரப்புக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

2005 ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்களை வாக்களிக்காமல் தடுக்கச் செய்வதற்காக விடுதலைப் புலிகளுக்கு நிதி கொடுக்கப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அந்த நிதிக் கொடுக்கலின் பெயரில் நடந்த சுத்துமாத்துகளின் பிரதான சூத்திரதாரியாகக் கூறப்படுபவரின் பத்திரிகைதான் இவை இரண்டும்.

இந்தப் பத்திரிகைகளின் முன் பக்கத்தில் செய்திக்குப் பதிலாக விளம்பரம் பிரசுரிப்பதற்குப் பெரும் தொகைக் கட்டணம் விதிக்கப்பட்டுகின்றதாம்.

மஹிந்த தரப்பைத் தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடும் இந்தப் பத்திரிகைகளில் முன் பக்கத்தில் தமது விளம்பரத்தைப் பிரசுரிக்க விரும்பியது சஜித் தரப்பு. பேரம் பேசப்பட்டது. ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரண்டு மொழிப் பத்திரிகைகளிலும் முன் பக்கம் மற்றும் கடைசிப் பக்கங்களில் – அதுவும் தேர்தல் விளம்பரங்களுக்கான கடைசித் தினமான நேற்றுப் விளம்பரம் பிரசுரிப்பதற்கு – கட்டணம் நூறு கோடிகளைத் தாண்டியது என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தளவு பெருந்தொகைப் பணத்தை ஒரு நாள் விளம்பரத்துக்கு அறவிட்டுச் சூறையாடிய அந்த நிறுவனம், சஜித் தரப்புக்கு அந்த இடத்தை வழங்கிய ‘குற்றத்துக்கு’ உரிய ‘பிராயச்சித்தமாக’ மஹிந்த தரப்பை சமாதானப்படுத்தும் வகையில் ஒரு வேலை செய்தது.

நேற்றைய பத்திரிகையில் முதலாம் பக்கம் சஜித் தரப்பு விளம்பரமானமையால் செய்திகளுக்குரிய முகப்புப் பக்கமாக மூன்றாம் பக்கம் அமைந்தது.

அதில் தலைப்புச் செய்தி என்ன தெரியுமா? செய்தியின் கதாநாயகன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன். அவரின் படத்துடன்தான் இரண்டு நாளிதழ்களிலும் தலைப்புச் செய்தி. அந்தச் செய்தி என்ன தெரியுமா?

*“சிங்களவர்களைத் தோற்கடிக்க ஒரே வழி சஜித்துக்கு வாக்களிப்பதுதான் – சுமந்திரன் தெரிவிப்பு”* என்று அந்தச் செய்தி வெளியாகியிருக்கின்றது.

பேரினவாதத்தைத் தூண்டி, வாக்குத் திரட்டும் மிகக் கீழ்த்தரமான உத்தி இது.

இதற்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை விரைந்து எடுக்க முற்பட்டிருக்கின்றார் சுமந்திரன்.

இனங்களுக்கு எதிராக குரோதங்களை ஏற்படுத்துவது தொடர்பான சர்வதேச சட்டவாக்கத்தில்(சிவில் மற்றும் குடியியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பொருந்தனை) இலங்கை ஒப்பமிட்டிருக்கின்றது. அது தொடர்பான சட்ட நடவடிக்கையை மேற்கோள்காட்டி பொலிஸ் மா அதிபருக்கு சுமந்திரன் அவசர கடிதம் எழுதியுள்ளார். இந்தச் சட்டத்தின் கீழ் பிணையில் வெளியே வராத முறையில் சம்பந்தப்பட்ட இரு பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் எதிராகக் கைது நடவடிக்கையை உடன் மேற்கொள்ளும்படி அவர் பொலிஸ் மா அதிபருக்குச் செய்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

தாம் கூறாத ஒரு விடயத்தைக் கூறினார் எனத் தெரிவித்து, இனக்குரோதத்தைத் தூண்டித் தமக்கும், தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டுக்கும் வேண்டுமென்றே குந்தகம் விளைவித்த இந்த நடவடிக்கைக்கு எதிராக இரண்டு பத்திரிகை நிறுவனங்களிடமிருந்தும், இதற்கு முன்னர் இதே போன்ற செய்தியை வெளியிட்ட இன்னொரு சிங்களப் பத்திரிகைக்கும் சேர்த்து தலா ஆயிரம் கோடி ரூபா நஷ்ட ஈடு கேட்டு அவர் உடனடியாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

அதே நேரம் தேர்தல்கள் ஆணையத்தின் மூன்று ஆணையாளர்களுக்கும் நேற்று அவர் தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்தமையுடன் எழுத்திலும் அதனை அனுப்பி வைத்துள்ளார்.

நேற்று மதியம் நடைபெறவிருந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தேர்தல் ஆணையமே இது தொடர்பில் உண்மை நிலையை அம்பலப்படுத்தும் என்றும், சம்பந்தப்பட்ட இரு பத்திரிகைகளிலும் இன்றைய பிரசுரத்தில் அதேயளவு முக்கியத்துவம் கொடுத்து உண்மை நிலையைத் தெளிவுபடுத்தும்படி அந்தப் பத்திரிகையின் நிர்வாகிகள் அறிவுறுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வாக்குகளைச் சுருட்டுவதற்காக சில தரப்புகள் எத்தகைய இழிவு நிலைக்கும் இறங்கத் தயாராக உள்ளது என்பதற்கு இந்தச் சம்பவம் நல்லதோர் உதாரணம்.

சுமந்திரன் போன்ற முக்கிய பிரமுகரின் பெயரைக் கூட, தேர்தலில் வெல்லுவதற்காக எவ்வகையிலும் மோசமாகப் பயன்படுத்துவதற்கு தரப்புகள் தயார் என்பதை இந்தச் சம்பவம் இலகுவாக நிரூபித்து நிற்கின்றது.

*“சிங்களவரைத் தோற்கடிப்பதற்கு சஜித்துக்கு வாக்களியுங்கள் என்று சுமந்திரன் பகிரங்கமாகப் பேசினார்”* என ஒரு பேரினவாதப்பத்திரிகைஆதாரமின்றி–காரணமின்றி–துணிந்து – பொய்யாக – எழுத முடியுமானால் அது பேரினவாதப் பெருங்கொடூரத்தின் மோசமான நிலையன்றி வேறில்லை.

# வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நேற்று விசேட அணிவகுப்பு மரியாதை





கொழும்பு, நவ. 14

வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேவிக்கிரமவின் பிரியாவிடை நிகழ்வு நேற்று காலை பொலிஸ் தலைமையகத்தின் மைதானத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸ லால் சில்வா தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 2018ஆம் ஆண்டு வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபாராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட அனுரா அபேயவிக்கிரமவின் பதவிக் காலம் எதிர்வரும் 18ஆம் திகதியுடன் நிறைவடைவதை முன்னிட்டு நேற்று அவருக்கான விடே அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பொலிஸ் அத்தியட்சகர்களான மல்வலகே. வீரக்கோன், வவுனியா, நெடுங்கேணி, கனகராஜன் குளம், ஓமந்தை, பூவரசன்குளம், செட்டிகுளம் போன்ற பகுதியின் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகள், பொலிஸார், சர்வ மதத்தலைவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ - 100)

# கடந்த இரண்டு நாள்களில் மட்டும் பிரசாரத்துக்கு ரூ.131 கோடி செலவு

கொழும்பு, நவ. 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், பிரதான கட்சிகளின் மூன்று வேட்பாளர்களின் செலவீனங்கள் தொடர்பிலான தகவல்களை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, புதிய ஜனநாயக முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய 3 பிரதான கட்சிகள் உட்பட 5 கட்சிகளின் கடந்த ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி முதல் நவம்பர் 10 ஆம் திகதி வரையான செலவீனங்களை அந்த நிலையம் வெளியிட்டது.

அதன்படி கடந்த 9 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இரண்டு நாட்களில் மட்டும் ஜனாதிபதி வேட்பாளர்கள் 131 கோடி ரூபாவைப் பிரசாரங்களுக்காகப் பயன்படுத்தியுள்ளனர் எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜக்ஷ சார்பாக இதுவரை 151கோடி ரூபா இந்த காலப் பகுதிக்குள் மாத்திரம் செலவிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதேபோன்று சஜித் பிரேமதாஸ போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணி சார்பாக இதுவரை 142கோடி ரூபா இந்தக் காலப் பகுதியில் மாத்திரம் செலவிட்டுள்ளதாக அந்த நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க சார்பாக இந்த காலப் பகுதியில் 16 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் புதிய ஜனநாயக முன்னணி ஆகியன ஒளிபரப்பு ஊடகத்துக்காகவே அதிகளவிலான செலவீனங்களை மேற்கொண்டுள்ளன என அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கையில் நடைபெறுகின்ற தேர்தல்களில் செலவினங்கள் தொடர்பான வரையறையொன்றை வைக்கவேண்டிய வகையில் சட்டமொன்று உருவாக்கப்படவேண்டும் என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் புரட்சிப் பாடல் ஒலிபரப்பியவர் கைது

கல்முனை, நவ. 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் புரட்சிப் பாடல்களை ஒலிபரப்ப முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்மன் கோயில் வீதியில் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து கூட்டமைப்பின் இறுதி பிரசாரக் கூட்டம் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் புரட்சி பாடல் திடீரென ஒலிபரப்பு செய்யப்பட்டது.

இதன்போது கல்முனை பொலிஸாருக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு உடனடியாக வந்த பொலிஸார், சந்தேகத்தில் அந்தக் கூட்டத்துக்கு ஒலிபரப்பு ஒழுங்குகளை மேற்கொண்ட இளைஞனைக் கைது செய்தனர்.




**நாளை**
14.11.2019
வியாழக்கிழமை
நட்சத்திரம்: திருதியை மு.இ. 08.09 வரை.
திதி : மிருகசீரிடம் மு.இ. 11.56 வரை.
இராகுகாலம் : 10.37 – 12.07
சுப நேரம் :06.07 – 07.37

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி யிலிருந்து மாலை 5.00 மணி வரை– **வவுனியா பிரதேசத்தில்** செட்டிக்குளம் நகர பிரதேசத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## இலங்கையில் 6 ஜி!

## சஜித் வந்தால் கிடைக்கும் என்கிறார் பிரதமர் ரணில்




கொழும்பு, நவ. 14

இலங்கையில் உள்ள இளம் சமூகத்தினரின் கோரிக்கையான 6ஜி டிஜிற்றல் சமூகத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரே வேட்பாளர் சஜித் பிரேமதாஸ என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வாழ்க்கையில் விடுதலை மற்றும் அனைத்துத் தீர்மானங்களையும் இணையம் ஊடாகப் பெறும் சந்தர்ப்பமே சமகால இளம் சமூகத்தின் எதிர்பார்ப்பதாகும். அதற்கமைய இளம் சமூகத்திற்கு இணையப் புரட்சியை ஏற்படுத்த கூடிய ஒரே கட்சியாக ஐக்கிய தேசிய கட்சி உள்ளது.

6 இலக்கங்கள் கொண்ட சம்பளம் பெறும் தொழில் ஒன்றைப் பெறும் கனவு நனவாக்கப்படும். வாழ்க்கையின் அனைத்துச் சேவைகளை இணையத்தில் பெறும் சுதந்திரத்தை இளைஞர்கள் கேட்கின்றார்கள். இன்று உலகில் 4ஜி தொழில்நுட்பம் உள்ளது. அடுத்த வருடம் 5ஜி ஆக மாறும். 6ஜியும் தற்போது தயாராகின்றது. இளைஞர்கள் வழங்கும் சவாலை ஏற்க நாம் தயார். டேட்டாவில் விடுதலை வழங்க நாம் தயார். இணையத்தில் புரட்சி செய்ய நாம் தயார். நாங்கள்தான் 6 ஜியை இந்த நாட்டிற்கு கொண்டுவரப்போகிறோம். உங்கள் கனவு நனவாக்கப்படும் – என்றார். (ஐ)

# ராஜபக்ஷ முகாமை முழுமையாகத் தகர்த்தெறிந்து நல்லாட்சியை காக்க சஜித்துக்கு வாக்களிப்போம்!

## வாக்குரிமையை பயன்படுத்துமாறு வேலுகுமார் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, நவ. 14

10 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரம் கைவசமிருந்தபோது பெருந்தோட்டத் தொழிலாளர்களை அடக்கி ஆண்டு, அடிமைகளாக வழிநடத்திய ராஜபக்ஷாக்களும், 'தொண்டமான் காங்கிரஸ்' உறுப்பினர்களும், இன்று மலையக தமிழர்களுக்காக குரல் கொடுப்பதானது ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுதகதைபோல் உள்ளது – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

அதேபோல் இறுதிப்போரின்போது தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக கொன்று குவிக்கப்பட்டபோது தெற்கில் பாற்சோறு சமைத்து, பட்டாசு கொளுத்தி கொண்டாட்டங்களில் ஈடுபட்ட நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மஹிந்த அணி உறுப்பினர்கள், இன்று வடக்குக்குச் சென்று அங்குள்ள மக்களை கட்டியணைத்து வாக்கு கேட்கின்றனர். இவர்களுக்கு எதிர் வரும் 16 ஆம் திகதி 'வாக்குரிமை' என்ற ஜனநாயக ஆயுதத்தின் ஊடாக மக்கள் தக்க பாடத்தை புகட்டுவார்கள் என்றும் வேலுகுமார் எம்.பி. குறிப்பிட்டார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதிப்படுத்தும் பிரசாரக்கூட்டம் நேற்று கண்டியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே வேலுகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மலையகத் தமிழர்களின் வாக்குகள் தங்களுக்குக் கிடைக்காது என்பதால், சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் தொண்டமான் காங்கிரஸ் உட்பட மேலும் சில கட்சிகளை விலைக்கு வாங்கி, மலைநாட்டில் காலூன்றுவதற்கு ராஜபக்ஷாக்களும் அவரின் விசுவாசிகளும் முயற்சித்தனர். ஆனால், சஜித்துக்கே தாங்கள் வாக்களிப்போம் என்பதை மலையக மக்கள் உறுதிப்படுத்தியுள்ளமையால் கதிகலங்கி நிற்கின்றனர்.

படைபட்டாளத்தோடு பெருந்தோட்டப்பகுதிகளுக்குவந்து தொண்டை கிழிய கத்தி, பெருந்தோட்ட மக்களுக்காக பல வாக்குறுதிகளை ராஜபக்ஷாக்கள் வழங்கியுள்ளனர். 10 ஆண்டுகளாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வகித்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு, பதவியில் இருக்கும்போது பெருந்தோட்ட மக்கள்மீது வராத அக்கறை இன்று திடீரென வந்துள்ளது ஏன்? அரியணையேறுவதற்காக எந்த வேசத்தையும் போடுவதற்கு ராஜபக்ஷ தயாராகவே இருக்கிறார் என்பது இதன்மூலம் உறுதியாகின்றது.

மறுபுறத்தில் எதாவது அமைச்சு பதவியும், சலுகைகளும் கிடைத்தால் போதும் என்ற நினைப்பில் அரசியல் நடத்திவரும் ஆறுமுகன் தொண்டமான், தான் அமைச்சராக இருந்தபோது, பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காக ஓர் அமைச்சரவைப் பத்திரத்தையாவது சமர்ப்பித்திருப்பாரா? அவ்வாறு சமர்ப்பித்திருந்தாலும் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றி பயனை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்திருப்பாரா?

அத்துடன், நாடாளுமன்றத்தில் ஒரு சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையாவது கொண்டுவந்திருப்பார்களா? சட்டமூலங்களை முன்வைத்திருப்பார்களா? அவ்வாறு செய்திருந்தால் அதனை ஆதாரத்துடன் அறிவிக்குமாறு தொண்டமானுக்கும், அவரின் சகாக்களுக்கும் சவால் விடுக்கின்றேன்.

எல்லாம் கைவசம் இருந்தபோது மலையக மக்களுக்காக எதனையும் செய்யதாவர்கள், இன்று அவர்களின் நலன் குறித்து கதைப்பதானது, ஆடு நனைகிறதே என ஓநாய் அழுதகதைபோல்தான் இருக்கின்றது. எனவே, ராஜபக்ஷ, தொண்டமான் கூட்டணியைக் கனவில்கூட நம்பக்கூடாது. அவ்வாறு நம்பினால் நாட்டுக்கும், வீட்டுக்கும், நமக்கும் இனி இருண்ட யுகத்தை நோக்கியே பயணிக்க வேண்டிவரும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியே குறுகிய காலப் பகுதிக்குள் அபிவிருத்திக்குச் சமாந்தரமாக உரிமைசார் விடயங்களையும் மக்களுக்காக வென்றெடுத்துள்ளது. இதன் காரணமாகவே முற்போக்குக் கூட்டணி ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்துக்கு பேராதரவை வழங்க மக்கள் தீர்மானித்துள்ளனர்.

அதேவேளை, போர் முடிவடைந்த பின்னர் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களை அடக்கி ஆள ராஜபக்ஷாக்கள் முயற்சித்தனர். ஆனால், தன்மானத் தமிழர்கள் அடங்க மறுத்தனர். துணிகரமாக அறவழியில் போராடினர். தேர்தல்களிலும் பதிலடி கொடுத்தனர்.

இருந்தும் வெட்கமில்லாமல் மீண்டும் மீண்டும் வடக்குக்கு சென்று கெஞ்சுகின்றனர். இம்முறை நாமல் ராஜபக்ஷ சென்றுள்ளார். மக்களை கட்டியணைத்துச் சிறப்பாக நாடகத்தை அரங்கேற்றிவருகிறார். அவருக்கும் அவரின் பங்காளிகளுக்கும் 16 ஆம் தக்க பாடம் புகட்டப்படும்.

மேலும் வாக்குரிமை என்பது எமது பிறப்புரிமையாகும். அந்த ஜனநாயக உரிமையை அனைவரும் கட்டாயம் பயன்படுத்த வேண்டும். எனவே, 16 ஆம் திகதி மாலைவரை காத்திருக்காமல், நேரங்காலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்குமாறு வாக்காளர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். – என்றார். (ஐ)

# முஸ்லிம் சமூகத்துக்கு கோட்டாவால் ஆபத்து

## பைசல் காசிம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 14

கோட்டாபயவின் ஊடாக முஸ்லிம் சமூகத்துக்கு வரவிருக்கும் ஆபத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு சஜித்தை வெற்றி பெற வைப்பதைத் தவிர வேறு வழி கிடையாது என இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

நிந்தவூரில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சஜித் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கையில் நாம் உள்ளோம். 51 நாள் பிரச்சினையின்போது ஒவ்வொரு நாளும் அலரிமாளிகையில் கூடி பேசுவோம். அப்போது எங்கள் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறினார் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் புதிய வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்று. சஜித்தையே அவர் பிரேரித்தார். பின்வரிசை எம்.பிக்கள் அதற்கு ஆதரவு வழங்கினார்கள். அதன் பின்னணியில்தான் சஜித் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். எமது தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றி வேட்பாளர் தான் சஜித். இவரை எதிர்த்து போட்டியிடுபவர் கோட்டாபய.

அவரை விவாதத்துக்கு வருமாறு சஜித் அழைத்து வருகிறார். கோட்டாபய மறுத்து வருகிறார். ஒரு விவாதத்துக்கே வர மறுப்பவரால் எப்படி நாட்டை ஆட்சி செய்ய முடியும்? கோட்டாபய மிகவும் ஆபத்தானவர். அவர் எமது தனியார் சட்டத்தில் கைவைக்கும் திட்டத்தில் உள்ளார். அவர் வந்தால் அது நிச்சயம் நடக்கும். எமது கலாசாரத்துக்கு எதிராக அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்கிறார். மத்ரஸாக்களை அரசின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கிறார்.

முஸ்லிம்களுக்கு எதிராக இவ்வாறான சட்டங்கள் கொண்டுவரப்படும் போது எம்மால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. அவரை நாம் தோற்கடித்தால்தான் இந்த ஆபத்துக்களில் இருந்து எமது சமூகம் தப்பும். இந்த விடயத்தில் முஸ்லிம்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். கோட்டாபயவின் ஊடாக எமது சமூகத்துக்கு வரவிருக்கின்ற ஆபத்தை இல்லாது செய்யவேண்டும் என்றால் சஜித்தை வெல்ல வைப்பதைத் தவிர வேறு வழியில்லை – என்றார். (ஐ)

# பேஸ்புக் விளம்பரங்களை நிறுத்த பவ்ரல் கோரிக்கை

கொழும்பு, நவ. 14

ஜனாதிபதித் தேர்தலுக்கான 'அமைதியான காலகட்டத்தில்' பணம் செலுத்திய அரசியல் விளம்பரங்களைத்தனது சமூக ஊடக பயனாளர்களுக்குக் காண்பிப்பதை நிறுத்துமாறு பேஸ்புக் நிறுவனத்திடம் பவ்ரல் அமைப்பு கோரியுள்ளது.

தேர்தல் பிரசாரங்கள் நேற்று நள்ளிரவு முதல் முடிவடைந்துள்ள நிலையில், நள்ளிரவு முதல் பேஸ்புக் நிறுவனமும் அதற்கு ஒத்துழைக்க வேண்டுமென பவ்ரல் கோரியுள்ளது.

சமூக ஊடகத் தளங்களில் அரசியல் விளம்பரங்கள் தங்கள் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான மக்களின் சுயாதீனமான முடிவைப் பாதிக்கின்றன என்று பவ்ரல் நிர்வாக இயக்குநர் ரோஹன ஹெட்டியராச்சி தெரிவித்தார். (ஐ)

## போர்க்குற்றச்சாட்டு காரணமாக

# மூன்று இராணுவத் தளபதிகளின் பிள்ளைகளுக்கு விசா நிராகரிப்பு

கொழும்பு, நவ. 14

இறுதியுத்தத்தில் முக்கிய பங்காற்றிய இலங்கை இராணுவத்தின் மூன்று முக்கிய தளபதிகளின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி விசாக்களை மூன்று நாடுகள் நிராகரித்துள்ளன.

உயர்கல்வி நோக்கத்துக்காக அவர்களின் பிள்ளைகள் சமர்ப்பித்த விசாக்களே நிராகரிக்கப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியா, கனடா, பிரித்தானிய விசாக்களே நிராகரிக்கப்பட்டுள்ளன.

இறுதி யுத்தத்தில் மனித உரிமை மீறல், போர்க்குற்றம் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளும் இந்த மூன்று தளபதிகளும் மேற்படி நாடுகளுக்குச் செல்ல ஏற்கனவே விசா மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர் Kalaikathir





# கர்நாடகத்தில் 17 எம்.எல்.ஏக்களை தகுதி நீக்கம் செய்தமை செல்லும்!

## உச்சநீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

புதுடெல்லி,நவ.14

கர்நாடக எம்.எல்.ஏ.க்கள் 17 பேரும் தகுதிநீக்கம் செய்யப்பட்டமை செல்லும் என்று உச்சநீதிமன்றம் நேற்று அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

கர்நாடகத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதம் சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. பாரதீய ஜனதா 104 தொகுதிகளில் வெற்றி பெற்று பெரிய கட்சியாக உருவெடுத்தது.

ஆனால், காங்கிரஸ் – ஜனதா தளம் (எஸ்) கட்சிகள் கூட்டணி அமைத்து ஆட்சி அமைத்தன. குமாரசாமி முதலமைச்சராகப் பதவி ஏற்றார். காங்கிரஸுக்குத் துணை முதல்வர் பதவி ஒதுக்கப்பட்டது.

14 மாதங்கள் குமாரசாமி ஆட்சி நடத்திய பிறகு கூட்டணி கட்சிகளின் 15 எம்.எல்.ஏ.க்கள் திடீரென இராஜினாமாச் செய்தனர். அதைத் தொடர்ந்து கடந்த ஜுலை 23 ஆம் திகதி குமாரசாமி அரசு நம்பிக்கை வாக்கெடுப்புக் கோரியது. இதில் கூட்டணிக் கட்சிகளைச்சேர்ந்த – ராஜினாமா செய்தவர்கள் உள்பட – 17 எம்.எல்.ஏ.க்கள் ஆஜராகாதமையால், குமாரசாமி அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்து கவிழ்ந்தது. கடந்த 3 மாதங்களுக்கு முன்பு எடியூரப்பா தலைமையில் புதிதாக பாரதீய ஜனதா ஆட்சி பொறுப்பேற்றது.

காங்கிரஸ், ஜனதா தளம் (எஸ்) கட்சிகளின் கொறடா உத்தரவை மீறினர் என்ற குற்றச்சாட்டில் 17 எம்.எல்.ஏ.க்களைக் கட்சி தாவல் தடை சட்டத்தின் கீழ் அப்போதைய சபாநாயகர் ரமேஷ்குமார் தகுதி நீக்கம் செய்து உத்தரவிட்டார். மேலும் அவர்கள் அனைவரும் வருகிற 2023 ஆம் ஆண்டு வரைக் கர்நாடக சட்டசபைத் தேர்தலில் போட்டியிடவும் அவர் தடை விதித்தார். இதில் 3 தொகுதிகளின் எம்.எல்.ஏ.க்கள் ஜனதா தளம் (எஸ்) கட்சியைச் சேர்ந்தவர்கள். மீதமுள்ள 14 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

இதை எதிர்த்து, தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் 17 பேரும் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். இந்த மனு மீது நேற்றுத் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், கர்நாடக எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கம் செல்லும் என்று அதிரடி உத்தரவை வழங்கியது. அதேவேளையில், தகுதிநீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் இடைத்தேர்தலில் போட்டியிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

காலியாக உள்ள 17 தொகுதிகளில் 15 தொகுதிகளுக்கு டிசம்பர் 5 இல் இடைத்தேர்தல் நடைபெறும் எனத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது கவனிக்கத்தக்கது.

# தேர்தல் நடந்த மகாராஷ்டிரத்தில் ஜனாதிபதி ஆட்சி நடைமுறைக்கு!

## எந்தத் தரப்புக்கும் பெரும்பான்மை கிட்டாததால்

புதுடில்லி,நவ.14

புதிதாகத் தேர்தல் நடந்த மராட்டியத்தில் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாத நிலைமை நீடித்தமையால் ஜனாதிபதி ஆட்சி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

மராட்டிய சட்டசபைக்கு கடந்த மாதம் 21 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டு, 24 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டன.

இந்தத் தேர்தலில் பாரதீய ஜனதா 105 இடங்களைப் பிடித்துத் தனிப்பெரும் கட்சியாக வந்தது. அதன் கூட்டணி கட்சியான சிவசேனா 56 இடங்களை கைப்பற்றியது.

எதிர்த்தரப்பில் தேசியவாத காங்கிரஸ் 54 இடங்களிலும், காங்கிரஸ் 44 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. சிறிய கட்சிகள் 16 இடங்களிலும், 13 சுயேச்சை எம்.எல்.ஏக்களும் வெற்றி பெற்றனர்.

288 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் ஆட்சி அமைக்க 145 இடங்கள் தேவை என்ற நிலையில், 161 இடங்களில் வெற்றி பெற்ற பாரதீய ஜனதா, சிவசேனா கட்சிகள் உடனடியாக ஆட்சி அமைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதலமைச்சர் பதவியை சுழற்சி முறையில் தங்களுக்கு இரண்டரை ஆண்டுகள் தர வேண்டும் என்று சிவசேனா வலியுறுத்தியது. முதலமைச்சர் பதவியை பகிர்ந்து கொள்வது, ஆட்சியில் சமபங்கு என்பது நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பே இரு கட்சிகள் இடையே பேசி முடிவு செய்யப்பட்டதாக சிவசேனா கூறியது.

ஆனால் பாரதீய ஜனதா இதை திட்டவட்டமாக மறுத்தது. இதனால் ஏற்பட்ட மோதல் காரணமாக இரு கட்சிகளும் இணைந்து கூட்டணி அரசை அமைக்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

இதையடுத்துத் தனிப்பெரும் கட்சி என்ற முறையில் ஆட்சி அமைக்க முடியுமா என்று பாரதீய ஜனதாவிடம் ஆளுநர் பகத்சிங் கோஷியாரி கடந்த சனிக்கிழமை கேட்டு அழைப்பு விடுத்து இருந்தார். ஆனால் தங்களுக்குப் போதிய ஆதரவு இல்லாததால் ஆட்சி அமைக்க இயலாது என்று மறுநாள் பாரதீய ஜனதாத் தலைவர்கள் ஆளுநரைச் சந்தித்துத் தெரிவித்து விட்டனர்.

உடனடியாக இரண்டாவது பெரிய கட்சி என்ற முறையில் சிவசேனாவுக்கு ஆளுநர் அழைப்பு விடுத்தார். இதற்காக செவ்வாய் இரவு 7.30 மணி வரை ஆளுநர் அவகாசம் வழங்கி இருந்தார்.

இதையடுத்து முதலமைச்சர் பதவியை என்ன விலை கொடுத்தாவது பெற்றே தீருவோம் என்று சிவசேனா எம்.பி. சஞ்சய் ராவத் கூறினார். சிவசேனா தலைமையில் ஆட்சி அமைக்க அந்தக் கட்சி தலைவர் உத்தவ் தாக்கரே தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் ஆதரவை நேரடியாக நாடினார். தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவாரை நேரில் சந்தித்தும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைப் போனில் தொடர்பு கொண்டும் பேசினார். ஆனால், அந்த இரு கட்சிகளும் ஆதரவுக் கடிதம் கொடுக்காதமையால், ஆளுநரிடம் தனது பெரும்பான்மையை சிவசேனாவால் உறுதிப்படுத்த முடியவில்லை.

ஆளுநரை நேரில் சந்தித்த உத்தவ் தாக்கரே மகன் ஆதித்ய தாக்கரே மூன்று நாள்கள் அவகாசம் அளிக்குமாறு கேட்டார். ஆனால் சிவசேனா கோரிக்கையை நிராகரித்த ஆளுநர் உடனடியாக மூன்றாவது பெரிய கட்சியான தேசியவாத காங்கிரஸுக்கு அழைப்பு விடுத்தார்.

இதையடுத்து திங்கள் இரவு தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவர் அஜித்பவார், ஆளுநரைச் சந்தித்துப் பேசினார்.

இவ்வாறு அடுத்தடுத்த ஏற்பட்ட அரசியல் திருப்பங்கள் நேற்று முன்தினம் உச்சக்கட்டத்தை எட்டியது.


காங்கிரஸ், சிவசேனா ஆதரவு இல்லாமல் தங்களால் ஆட்சி அமைக்க முடியாது என்பதால், இது தொடர்பாக முடிவு எடுக்க சரத்பவாருக்கு தங்களது கட்சி எம்.எல்.ஏ.க்கள் அதிகாரம் வழங்கி இருக்கின்றனர் எனத் தேசியவாத காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் நவாப் மாலிக் கூறினார்.

இந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிவசேனா எம்.பி. சஞ்சய் ராவத்தை சரத்பவார் சந்தித்து பேசினார்.

மற்றொரு புறம் சரத்பவாரை போனில் தொடர்பு கொண்ட சோனியா காந்தி, ஆட்சி அமைக்கும் விவகாரம் குறித்து அவருடன் பேச தனது கட்சி சார்பில் 3 பிரதிநிதிகளை அனுப்பி வைப்பதாக கூறினார்.

அதன்படி காங்கிரஸ் மூத்த தலைவர்கள் அகமது படேல், மல்லிகார்ஜுன கார்கே, கே.சி.வேணுகோபால் ஆகியோர் மும்பை அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் மாலையில் மும்பை வந்து சேர்ந்தனர்.

சரத்பவார் கட்சியின் முடிவுக்காக செவ்வாய் இரவு 8.30 மணி வரை ஆளுநர் கெடு விதித்து இருந்தார். ஆனால் திடீர் திருப்பமாக பிற்பகலில் அவர் மராட்டியத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்துமாறு மத்திய அரசின் உள்துறைக்குப் பரிந்துரைக் கடிதம் அனுப்பினார். அரசமைப்பு சட்டப்படி மாநிலத்தில் அரசு அமைக்க முடியாததால், 356 ஆவது விதியின் கீழ் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்துமாறு அந்தப் பரிந்துரையில் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.




ஆளுநர் பரிந்துரை அறிக்கை அனுப்பியதாகத் தகவல் வெளியான சிறிது நேரத்திலேயே பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் மத்திய மந்திரி சபை கூட்டம் நடந்தது. அதில், மராட்டிய ஆளுநரின் பரிந்துரை குறித்து ஆலோசிக்கப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதையடுத்து மராட்டியத்தில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு மத்திய மந்திரி சபை பரிந்துரையை அனுப்பியது.

மத்திய மந்திரி சபையின் பரிந்துரையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், நேற்று மாலை 5.30 மணி அளவில் மராட்டியத்தில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்தி உத்தரவு பிறப்பித்தார்.

இதன் மூலம் மராட்டியத்தில் தேர்தல் முடிவு வெளியான நாள் முதல் நேற்று வரை 20 நாள்களாக நடந்த அரசியல் குழப்பம் முடிவுக்கு வந்தது.

இனி ஆளுநர் பகத்சிங் கோஷியாரி தலைமையில் மராட்டிய அரசின் நிர்வாகம் நடைபெறும். அவர் தனக்கு உதவியாக சில ஆலோசகர்களை நியமித்துக் கொள்வார். புதிதாக தேர்வு செய்யப்பட்ட சட்டசபை இடைநீக்கம் செய்யப்பட்ட நிலையில் முடக்கி வைக்கப்பட்டு இருக்கும்.

அடுத்து போதிய ஆதரவுடன் ஆட்சி அமைக்க யாரும் முன்வந்தால், ஜனாதிபதி ஆட்சி விலக்கி கொள்ளப்பட்டு, புதிய அரசு பதவி ஏற்க வாய்ப்பு உள்ளது. இல்லாவிட்டால் சட்டசபைக்கு புதிதாகத் தேர்தல் நடத்தப்படும்.

# சபரி மலைக்கோயிலுக்குள் பெண்களை அனுமதிப்பது பற்றி இன்று முக்கிய தீர்ப்பு

புதுடெல்லி,நவ.14

சபரிமலை அய்யப்பன் கோவில் வழக்கில் இன்று காலை 10.30 மணிக்கு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்க உள்ளது.

கேரள மாநிலம் சபரிமலை அய்யப்பன் கோவிலில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்கக் கோரி இந்திய இளம் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் கடந்த 2006ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், சபரிமலை கோவிலுக்கு செல்லும் உரிமை அனைத்து வயது பெண்களுக்கும் உள்ளது எனத் தீர்ப்பளித்தது.

தீர்ப்பை எதிர்த்து கேரளாவில் பெரிய அளவில் போராட்டங்கள் நடந்தன. இந்த நிலையில், தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை முடிந்த நிலையில், இன்று (வியாழக்கிழமை) உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.



# உலகச் செய்தித் துளிகள்

* அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணம் சிகாகோ நகரில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள 2 விமான நிலையங்களில் இருந்து புறப்படும் சுமார் 1,200 விமானங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன.

* பெரு நாட்டில் தெற்கு பகுதியில் உள்ள புனோ நகரில் பயணிகள் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 37 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

* பிலிப்பீன்ஸின் கிழக்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் கிளர்ச்சியாளர்கள் இராணுவத்தினரைக் குறிவைத்துத் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 6ராணுவ வீரர்கள் பலியாகினர். மேலும் 20 வீரர்கள் பலத்த காயம் அடைந்தனர்.

* ஆப்கானிஸ்தானில் தலீபான் தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் அமெரிக்க பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் 2 பேரை மீட்பதற்காக, சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் மூத்த தலிபான் உறுப்பினர்கள் 3 பேரை விடு தலை செய்ய முடிவு செய்திருப்பதாக அந்த நாட்டின் அதிபர் அஷ்ரப்கனி கூறினார். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

* வங்காளதேசத்தை 'புல்புல்' புயல் புரட்டிப்போட்டு விட்டது. இந்த புயலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.


'புல்புல்' புயலின் பாதிப்பு

# நடிகர் மீது பித்துப் பிடித்து அலைந்ததால் மனைவியைக் குத்திக் கொன்ற கணவன்!

## பின் தானும் தூக்கிட்டுத் தற்கொலை நியூயோர்க்கில் இப்படியும் சம்பவம்

நியூயோர்க்,நவ.14

அமெரிக்காவில் இந்தியர் ஒருவர் தனது மனைவி, நடிகர் ஹிருத்திக் ரோஷன் மீது பித்துப் பிடித்த ரசிகையாக இருப் பதா என்ற கோபத்தில் தனது மனைவியைக் குத்திக்கொன்ற பின்னர் தானும் தற்கொலை செய்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் உள்ள குயின்ஸ் நகரில் வசித்து வந்த இந்திய தம்பதி தினேஷ்வர் பத்திதாட் (வயது 33), டோனி டோஜோய் (27). இவர்களுக்கு கடந்த ஜூலை மாதம்தான் திருமணம் நடந்தது. தினேஷ்வர் அங்குள்ள ஒரு மதுபான விடுதியில் வேலை பார்த்து வந்தார்.

டோஜோய், இந்தி நடிகர் ஹிருத்திக் ரோஷனின் தீவிர ரசிகை. அவரின் படம் வெளியானால் முதல் நாளிலேயே பார்த்துவிடுவார். அதுமட்டும் இன்றி எப்போதும் அவர் நடித்த படங்களின் பாடல்களைத்தான் கேட்டுக்கொண்டிருப்பார்.

தனது மனைவி தன்னை விட நடிகர் ஹிருத்திக் ரோஷனை அதிகம் விரும்பியமையால் அவர் மீது தினேஷ்வருக்கு கோபமும், வெறுப்பும் இருந்து வந்தது. இது தொடர்பாக இருவருக்கும் இடையே அடிக்கடி தகராறும் ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டில் இருந்தபோது ஹிருத்திக் ரோஷன் விவகாரம் தொடர்பாக கணவன் – மனைவிக்கு இடையே மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால்



ஆத்திரம் அடைந்த தினேஷ்வர் தனது மனைவி டோஜோயை கத்தியால் குத்தி கொலை செய்தார்.

பின்னர் அவர் டோஜோயின் மூத்த சகோதரியின் செல்போனுக்கு 'உங்கள் தங்கை டோஜோயை கொன்றுவிட்டேன். வீட்டுச்சாவியை, கீழே பூந்தொட்டியில் வைத்திருக்கிறேன்'– என்று குறுஞ்செய்தி அனுப்பினார்.

அதனை தொடர்ந்து வீட்டுக்கு எதிரே உள்ள மரத்தில் தினேஷ்வர் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டார். டோஜோயின் சகோதரி அளித்த தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் தினேஷ்வர் மற்றும் டோஜோயின் உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சிகச்சைக்காக நவாஸ் ஷெரீப் லண்டன் செல்வதற்கு அனுமதி

இஸ்லாமாபாத்,நவ.14

மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல அனுமதிக்கும் வகையில், வெளிநாடு செல்ல தடை விதிக்கும் பட்டியலில் இருந்து நவாஸ் ஷெரீப் பெயர் நீக்கப்பட்டுள்ளது.

'பனாமா பேப்பர்ஸ்' ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு 7 ஆண்டுகள் சிறை தண்



டனை விதிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, லாகூர் சிறையில் அடைக்கப்பட்ட அவர், உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்தார்.

இதையடுத்து, மருத்துவ சிகிச்சைக்காக அவருக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டது. கவலைக்கிடமான நிலையில் இரு வாரங்கள் அவர் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார்.

அதன்பின்னர் அவரது உடல்நலம் சற்று தேறியதும், லாகூரின் ஜதி உம்ராவில் உள்ள அவரது வீட்டுக்கு திரும்பினார். அங்கு அவரது உடல்நிலையை மருத்துவர்கள் தீவிரமாக கண்காணித்து வந்தனர்.

இந்த நிலையில் பாகிஸ்தானில் உள்ள அனைத்து மருத்துவ வசதிகளையும் பயன்படுத்தி நவாஸ் ஷெரீப்புக்கு சிகிச்சை அளித்துப் பார்த்துவிட்டதாகவும், அவரது உடல் நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த அவருக்கு வெளிநாட்டில் சிகிச்சை அளிப்பதுதான் ஒரே வழி என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர். அதனால், நவாஸ் ஷெரீப் வெளிநாடு செல்ல தடை இருப்பதால் அதற்கு அனுமதி கோரி அவரது குடும்பத்தினர் அரசிடம் விண்ணப்பித்தனர்.

அதனைப் பரிசீலித்த பாகிஸ்தான் அரசு அவரது உடல்நிலையைக் கருத்தில்கொண்டு சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியது. இதற்காக, நாட்டை விட்டு வெளியே செல்ல தடை விதிக்கப்பட்ட நபர்கள் பட்டியலில் இருந்து நவாஸ் ஷெரீப் பெயர் நீக்கப்பட்டது. இம்ரான்கான் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர் சிகிச்சைக்காக லண்டன் செல்வார் எனக் கூறப்படுகின்றது.

# பாக். அரசின் நிபந்தனைகளை ஏற்க மறுத்தார் நவாஸ் ஷெரீப்

லாகூர்,நவ.14

சிகிச்சைக்காகத்தாம் வெளிநாடு செல்வதற்கு பாகிஸ்தான் அரசு விதித்த நிபந்தனைகளை ஏற்க முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மறுப்பு தெரிவித்துள்ளார்.

நவாஸ் ஷெரீப்பின் மோசமான உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவரை வெளிநாடு செல்ல அனுமதிக்கும்படி அவரது உறவினர்களால் பாகிஸ்தான் அரசிடம் அனுமதி கோரப்பட்டது. இதனைப் பரிசீலித்த பாகிஸ்தான் அரசு அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு சிகிச்சைக்காக அவர் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியது.

ஆனால், ரூ.1,600 கோடிக்கு சொந்தப் பிணைத்தொகை வழங்க வேண்டும் என்றும், உடல் நிலை தேறியதும் பாகிஸ்தான் திரும்பி ஊழல் வழக்கை எதிர்கொள்வேன் என்று உத்தரவாதம் அளித்து கையெழுத்திட வேண்டும் என்றும் இம்ரான்கான் அரசு கடும் நிபந்தனைகளை விதித்தது.

ஆனால், இந்த நிபந்தனைகளை ஏற்க நவாஸ் ஷெரீப் மறுப்பு தெரிவித்துள்ளார். தனக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் சட்ட விரோதமானவை என்றும் உடல் நிலையை அரசியலாக்கும் செயல் இது என்றும் நவாஸ் ஷெரீப் விமர்சித்துள்ளார்.

# காபூலில் கார்க் குண்டுவெடிப்பு! ஏழு பேர் சாவு; 7 பேர் படுகாயம்



காபூல்,நவ.14

ஆப்கானிஸ்தானில் காபூலில் நடந்த கார் குண்டு வெடிப்பில் 7 பேர் பலியாகினர், 7 பேர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் கசாபா பகுதியில் உள்துறை அமைச்சின் அலுவலகத்துக்குப் பக்கத்தில் நேற்றுக் காலை 7:25 மணியளவில் நடந்த கார் குண்டு வெடிப்பில் 7 பேர் உயிரிழந்தனர் என உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குண்டுவெடிப்பில் 7 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். குண்டுவெடிப்பில் அப்பகுதியில் உள்ள பல வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

இந்தத் தாக்குதலுக்கு யாரும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை, ஆனால் ஈராக்கில் உள்ள தலிபான் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புகள் இரண்டும் தலைநகரில் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன. காபூலின் முந்தைய தாக்குதல்களுக்கு இவைதான் காரணமாக இருந்து உள்ளன.

உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் நஸ்ரத் ரஹிமி, நகரின் கசாபா பகுதியில் குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாகவும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை உயரக்கூடும் என்று தெரிவித்தார்.

தீவிரவாதிகளினால் சிறை வைக்கப்பட்டிருந்த அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலியப் பேராசிரியர்கள் இருவரை



விடுவிப்பதற்காக தலிபான்களின் இரண்டு தளபதிகள் மற்றும் ஓர் தீவிரவாத இயக்கத்தின் தளபதி ஆகியோரை ஆப்கான் விடுவித்த அடுத்த நாள் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சஜித்தை ஆதரித்துக் கூட்டமைப்பு நேற்று நல்லூரில் பிரசாரக் கூட்டம்



யாழ்ப்பாணம்,, நவ. 14

எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெற வுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆத ரவளிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஒழுங்குபடுத்தப் பட்ட மாபெரும் பிரசாரக் கூட்டம் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் நல்லூர் சங் கிலியன் பூங்காவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி. வீ. கே. சிவஞானம் தலைமையில் இடம்பெற் றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப் பினருமான இரா. சம்பந்தன், உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம் மானுவல்அடிகளார், இங்கைத்தமிழரசுக் கட்சியின் தலைவரும் எம்.பியுமான மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியு மான எம். ஏ. சுமந்திரன், தமிழ் ஈழ மக் கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் எம்.பியுமான த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவரும் எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.சரவணபவன் எம்.பி., யாழ்.மாநகர மேயர் ஆனோல்ட், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவி சாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பெரு மளவான பொதுமக்களும் கலந்து கொண்டனர். (ஐ -07)

# சுமந்திரனை இலக்காக வைத்து இனவாதத் தீயைக் கிளற முயற்சி

## தெற்கின் 3 பத்திரிகைகள் நரித் தந்திரம்

யாழ்ப்பாணம்,நவ.14

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சொல்லாத விடயமொன்றைஇனவாதத்தைக் கிளப்பும் வகையில் பிரதான செய்தியாக வெளியிட்ட மூன்று கொழும்புப் பத்திரிகைகள் மீது உடனடியாகநடவடிக்கையெடுக்க வலியுறுத்திள்ளார் சுமந்திரன்.



WEDNESDAY
CEYLON TODAY
...hance to save ...e country – MR
Sinhalese can be defeated
Only by voting for Sajith
– Sumanthiran

பதில் பொலிஸ்மா அதிபர், தேர்தல் ஆணையா ளர் ஆகியோருக்கு இது தொடர்பான முறைப்பாட்டுக் கடிதங்களை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

'மௌபிம','அருண' ஆகிய சிங்களப் பத்தி ரிகைகள், 'சிலோன் ருடே' ஆங்கிலப் பத்திரிகை ஆகிய கோட்டாபய ஆதரவு பத்திரிகைகளே சுமந் திரனின் செய்தியை திரித்து வெளியிட்டுள் ளன.

மாங்குளத்தில் நடந்த நிகழ்வில் சுமந்திரன், ' சிங்களவர்களைத் தோற் கடிப்பதற்காக சஜித்துக்கு வாக்களியுங்கள்' என்று தெரிவித்தார் என இப்பத்தி ரிகைகளின் முதல் பக்கத் தில் கொட்டை எழுத்தில் செய்தி வெயிடப்பட்டிருந்தது.

அதற்கு எதிராகவே கடும் நடவடிக்கைக்கு சுமந் திரன் தயராகியுள்ளார்.

( இவ்விவகாரம் பற்றிய முழுமையான விவரங்கள் 4ஆம் பக்கத்தில் இன்றைய ஆசிரிய தலையங்கத்தில்)

## மருந்தே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக் கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினால் ஒழுங்குபடுத்தப்பட்ட மாபெரும் பரப்புரைக் கூட்டம் நேற்று மாலை நல்லூரில் உள்ள சங்கிலி யன் பூங்காவில் ஆரம்பமானது.

இந்தக் கூட்டத்தில் உரையாற் றியபோதே மாவை இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

2010ஆம் ஆண்டும் ஜனாதி பதித் தேர்தலிலும் சிவாஜிலிங்கம் போட்டியிட்டார். இப்பொழுதும் போட்டியிடுகிறார். போட்டியிடாவிட் டால் உயிரைவிட்டு விடுவார். அதற்கு மருந்து கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கு மருந்தில்லா விட்டாலும், பாதிக்கப்படப் போவது தமிழ் மக் கள்தான். அவர் பெரியளவில் வாக் கெடுக்காவிட்டாலும், இன்று தமிழ் மக்களின் ஒவ்வொரு வாக்கும் முக் கியமானது. போட்டி பலமானது.

2015ஆம் ஆண்டு இருந்ததை விட மாறுப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்று நாங்கள் அனைவரும் உள்ளோம். தமிழ் மக்கள் ஒன்று பட்டு வாக்களிக்கவேண்டும்.

இப்போதும் ஒரு தரப்பினர் தேர்தலைப் புறக்கணிப்போம் என்கிறார்கள். 2005ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம ஷ்டி முறையில் அதிகாரத்தைத் தருவதாகக் கூறினார். ஆனால், அந்தத் தேர்தலில் அவர் தோற் கடிக்கப்பட்டார். அதேபோன்ற ஒரு நிலைமையே இப்போதும் ஏற்பட்டுள் ளது.

நாங்கள் சஜித்துடன் உடன் படிக்கை செய்யவில்லை. ஆனால் ராஜித, ரணில் விக்கிரமசிங்க போன் றவர்களுடன் சம்பந்தனும், சுமந்திர னும் பேசினார்கள். சஜித்தும் எதுவும் பேசவில்லை. ஆனால் சஜித் பிரேமதாஸ பொருத்தமான நேரத் தில் தேர்தல் அறிக்கையை வெளி யிட்டார் – என்றார். (ஐ–07)



# நேரகாலத்துடன் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று தகுதியான தலைவரைத் தெரிவு செய்ய வாக்களியுங்கள்

## மக்களிடம் யாழ் ஆயர் விநயமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,நவ.14

வாக்களிப்பு தினத்தன்று நேரகாலத்துடன் தேர்தல் நிலையத்திற்கு சென்று உங்கள் வாக்குக்களைப் போடுங்கள் என்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மக்களைக் கோரியுள்ளார்.



தேர்தலில் வாக்களிப்பது ஒரு ஜனநாயக உரிமை. இந்த உரிமையை மக்கள் அனைவரும் எவரின் கட்டாயமுமின்றி தெளிந்த மனதுடனும் தீர்க்கமான முடிவுடனும் பயன்படுத்த வேண்டும்.

தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்றோ அல்லது தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமென்றோ ஜனநாயகச் சுழலில் யாரையும் கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது.

தேர்தலைப் புறக்கணிப்பதால் இழப்படையப் போகின்றவர்கள் தேர்தலைப் புறக்கணிப்பவர்களே அன்றி வேறுயாருமல்லர்.

ஒருபோதும் வெல்ல மாட்டார்கள் எனத் தெரிந்தும் அவர்களைக் களத்தில் இறக்கி வாக்குக்களைச் சிதறடிக்கப் பல வேட்பாளர்களைக் களமிறக்குவது தேர்தல் இராஜதந்திரம் எனக் கருதப்பட்டாலும் இலங்கை நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்தை விரும்பாதவர்களின் செயற்பாடகவே இது கருதப்பட வேண்டும்.

அரசியற் கட்சிகளும் ஊடகங்களும் கருத்துருவாக்கும் பணியில் ஈடுபடுவது ஏற்றுக்கொள்ளப்படலாம். அந்த கருத்துருவாக்கத்தில் இருந்து மக்கள் யாருக்கு வாக்களிக்கலாம் என்ற நல்ல முடிவுகளை எடுக்க உதவலாம். நேரடியாகவே இவருக்கு வாக்களியுங்கள் என்றோ அல்லது இவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்றோ வேண்டுவது சரியானதல்ல.

தமிழ் மக்கள் தமது எதிர்கால வாழ்வை மிகுந்த கவனத்துடன் எடுத்து இந்தத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். தேர்தல் விஞ்ஞாபனங்கள் அனேக விடயங்களை எடுத்து சொல்லுகின்றன. எந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வெளியிடப்பட்ட விடயங்கள் ஒருபோதும் முழுமையாக நிறைவேற்றப்பட்டன என்ற சரித்திரம் இல்லை.

தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு நம்பிக்கை தரத்தக்க நல்ல தலைவரை இனம் கண்டு தகுதியானவருக்கு வாக்களிங்கள் என்று தமிழ் மக்கள் அனைவருக்கும் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இன்றுவரை தெரியப்படுத்தப்பட்ட கருத்துக்களை வைத்து நல்ல முடிவினை எடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். யார் இதய சுத்தியுடன் துணிவாக விடயங்களை நகர்த்துவார்கள், பாரபட்சமின்றித் தமிழ் மக்களின் தேவைகளை நிறைவு செய்வார்கள் என்பதைத் தெளிவாகக் கணிப்பிட்டு வாக்களியுங்கள். நேரகாலத்துடன் தேர்தல் நிலையத்திற்கு சென்று பதற்றமின்றி நிதானமாக உங்கள் வாக்குக்களை செல்லுபடியான வாக்குகளாகப் போடுங்கள்.

எந்த அசம்பாவிதமுமின்றி தேர்தல் நடைபெறவும், இலங்கை நாட்டிற்கும் குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் மக்களிற்கு நல்லதைச் செய்யக்கூடிய நல்ல தலைவர் தெரிவு செய்யப்படவும் இறையாசீர் வேண்டுகிறோம்.

– இவ்வாறு யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மக்களுக்கு விடுத்துள்ள விசேட செய்தியில் தெரிவித்துள்ளார்.

## செய்தி உண்மையற்றது!

கொழும்பு, நவ. 14

தனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தனக்கு நெருக்கமான சிலருடன் ஜனாதிபதி கலந்துரையாடல் நடத்தினார் எனச் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் செய்தியில் எவ்வித உண்மைகளும் இல்லை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்–

ஜனாதிபதி தனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தனக்கு நெருக்கமான சிலருடன் அண்மையில் விசேட கலந்துரையாடலொன்றை மேற்கொண்டார் எனவும், கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் மேற்கொண்ட சில தீர்மானங்கள் தொடர்பாக ஜனாதிபதி இதன்போது கவலை தெரிவித்தார் என்றும், நவம்பர் மாதம் 18ஆம் திகதி இந்த அனைத்து விடயங்களையும் மக்களுக்குத் தெரிவிக்கவுள்ளார் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார் எனச் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் செய்தியில் எவ்வித உண்மைகளும் இல்லை.

மேலும் எந்தவொரு தரப்பினரும் தேர்தலின் இறுதி சில நாள்களுக்குள் ஜனாதிபதி சம்பந்தமாக இத்தகைய போலியான செய்திகளை உருவாக்கிப் பிரசாரம் செய்வது குறித்து ஜனாதிபதி கவலை வெளியிட்டுள்ளார் – என்றுள்ளது. (ஐ)

## ஊடகவியலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

*கொழும்பு, நவ. 14*

*கடந்த காலங்களில் கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிவேண்டி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.*

*இந்தக் கவனவீர்ப்புப் ஆர்ப்பாட்டம் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.*

*இந்த கவனவீர்ப்பு போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டனர். (ஐ)*

## சந்திரிகாவின் கருத்து குறித்து போலிப் பிரசாரம் முன்னெடுப்பு

### அவரது ஊடகப் பிரிவு குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 14

விடுதலைப் புலிகளின் தலைவரை 'சேர்' என விழித்துத் தான் கூறவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுத் தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் சந்திரிகா கூறிய கருத்து திரிவுபடுத்தப்பட்டு போலிச் பிரசாரம் செய்யப்படுவதாகச் சந்திரிகாவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவரை 'சேர்' எனச் சந்திரிகா கூறவில்லை. சில ஊடங்கள் விசமப் பிரசாரங்களை முன்னெடுக்கின்றன. ஜனநாயகத்துக்கு எதிராகப் பயணித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்கு முயற்சிக்கும் அரசியல்வாதிகள், வாக்குகளைப் பெறுவதற்காக இவ்வாறான போலிப் பிரசாரங்கள் மூலம் சந்திரிகாவுக்கு எதிராகச் சேறு பூச முயற்சிக்கின்றனர் என அவரது ஊடகப் பிரிவு மேலும் கூறியுள்ளது.

அவ்வாறு குற்றம் சுமத்தும் வகையில் தான் கருத்து வெளியிட்டமைக்கான ஆதாரங்கள் இருப்பின் நிரூபிக்குமாறு சந்திரிகா சவால் விடுத்துள்ளார்.

அரசியல் நன்மைகள் பெறும் போக்கில் இவ்வாறான சேறு பூசும் நடவடிக்கை மேற்கொள்வது வருத்தமளிப்பதாக சந்திரிகாவின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## போக்குவரத்துச் சபைக்கு 2,000 பஸ்கள் இறக்குமதி

கொழும்பு, நவ. 14

இலங்கை போக்குவரத்துச் சபைக்காக 2 ஆயிரம் பஸ்களை இறக்குமதி செய்யப் போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அந்தவகையில் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பிரயாணிகளுக்குச் சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் இந்த பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன எனப் போக்குவரத்துச் சபை குறிப்பிட்டுள்ளது. எனினும் இறக்குமதி செய்யப்படவுள்ள பஸ்களில் அதிகளவானவை சொகுசு ரக பஸ்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிழக்கின் இருப்பைப் பற்றி இப்போது பேசுவோரே விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தோர்!

### ஸ்ரீநேசன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, நவ. 14

கிழக்கின் இருப்பைப் பற்றித் தற்போது பேசுவோரே விடுதலைப் போராட்டத்தைக் காட்டி கொடுத்தவர்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.



அத்துடன், எமக்குத் தேவை ஜனநாயக மயப்படுத்தப்பட்ட நாடாளுமன்ற அனுபவமுள்ள தலைவரே தவிர இராணுவ ஆட்சியாளர் அல்லர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப் பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்ற தெளிவுபடுத்தலை மேற்கொள்ள வேண்டிய தார்மீக பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது.

கடந்த கால இருண்ட வேதனைகளைப் படிப்பினையாக வைத்து இந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆழமாக சிந்தித்து அன்னம் சின்னத்தில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் பேசும் மக்கள் வாக்களிக்க வேண்டுமென்ற முடிவை எடுத்துள்ளது.

முன்பு அநீதிகளைச் செய்து பத்திரிகையாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொண்டர் நிறுவன ஊழியர்கள் ஆகியோரைப் படுகொலை செய்தமையை மனதில் வைத்துக்கொண்டு முடிவெடுக்க வேண்டும்.

அரசமைப்பு முயற்சியைக் குழப்பியடித்தவர்கள், இன்று நாங்கள் அரசியல் தீர்வை தருகிறோம் என ஏமாற்றி குற்றம் சுமத்துபவர்கள், அதனை தடுத்து நிறுத்தியவர்கள் என்பதோடு முன்பு இவர்களின் ஆட்சியில்தான் பல குற்றங்கள் முன்னெடுக்கப்பட்டன. இப்போது அவர்களுடன்தான் வியாழேந்திரன் இணைந்துள்ளார்.

தற்போது கிழக்கின் இருப்பைப் பற்றி பேசுவோர் தான் விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்கள். சஜித்துக்குப் பின்னால் உள்ள முஸ்லிம் தலைவர்களைவிட மொட்டு பக்கம் உள்ளவர்கள்தான் ஆபத்தானவர்கள். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ் பேசும் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் – என்றார். (ஐ)






# சமையல்காரராக மாறப்போகும் விராட் கோஹ்லி

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின் சமையல் கலையை கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறாராம் விராட் கோஹ்லி.

இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் ரசிகர்களை கொண்டவர் இந்திய அணியின் அணித்தலைவரான விராட் கோஹ்லி.

இவர் சமீபத்தில் அளித்துள்ள பேட்டியில், சிறுவயதிலிருந்தே உணவுப் பொருள்கள் மீது ஆர்வம் அதிகம். அதிகமாக துரித உணவுகளை எடுத்துக் கொள்வேன், சிக்கன், பட்டர் சிக்கன், பீன்ஸ் குருமா தொடங்கி தெரு வோரக் கடைகளில் சாப்பிட்டுள்ளேன்.

ஒரு உணவின் சுவையை நன்கு அறிந்து வைத்துள்ளதால், சமைக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

எனவே ஓய்வுக்கு பின் சமையல் கலையை கற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளேன்.- என தெரிவித்துள்ளார்.



# ஐ.பி.எல். தொடரில் 4 முக்கிய வீரர்களை கழற்றிவிட சென்னை சுப்பர் கிங்ஸ் திட்டம்

2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் நான்கு சீனியர் வீரர்களைக் கழற்றிவிடத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.பி.எல். தொடர்களில் பல்வேறு அணிகள் பங்கேற்றாலும் சென்னை அணிக்கு ரசிகர்கள் பட்டாளம் அதிகளவில் உள்ளது.

இதற்கிடையில் அடுத்த ஆண்டு ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் 19ஆம் திகதி கொல்கத்தாவில் நடக்கவுள்ளது.

இந்நிலையில் ஏலத்துக்கு முன்பாக ஒவ்வொரு அணியும் தக்கவைக்கும் வீரர்களும், மாற்று வீரர்கள் என இறுதி பட்டியலை தயார் செய்யவேண்டும்.

இதையடுத்து சென்னை அணி நிர்வாகம் தங்கள் அணியில் இருந்து நான்கு சீனியர் வீரர்களை மாற்ற திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

அதில் அம்பதி ராயுடு, முரளி விஜய், சார்துல் தாகுர், கேதர் ஜாதவ் ஆகியோரின் பெயர்கள் அடிபட்டு வருகின்றன.

இதில் ஷேன் வாட்சன், டுப்ளஸி ஆகியோரின் அசைக்க முடியாத ஆரம்பத்தில் முரளி விஜய், கடந்த ஆண்டில் இரு போட்டியிலும், 2018 இல் ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே பெற்றார். அதேபோல கேதர் ஜாதவ் கடந்த ஆண்டு தொடரில் சொல்லிக்கொள்ளும் அளவு சாதிக்கவில்லை.

அதேநேரம் உடற்தகுதி விடயத்திலும் ஜாதவ் சிக்கலில் உள்ளார். ஆனால் இவரை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் ரூ. 7.8 கோடிக்கு வாங்கியது. அதேபோல கடந்த 2018 ஐ.பி.எல். தொடருக்கு முன்பாக கரண் சர்மாவை சென்னை அணி ரூ. 5 கோடிக்கு வாங்கியது.

ஆனால் ஹர்பஜன், ரவிந்திர ஜடேஜா, இம்ரான் தாஹிர் என்ற சுழற்பந்துவீச்சாளர்களின் பட்டாளத்தால் பெரிய அளவில் இவர்கள் வாய்ப்பு பெறவில்லை.

இப்படி கோடிக்கணக்கில் ஏலத்தில் எடுக்கப்பட்ட வீரர்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதால் இவர்களை ஏலத்துக்கு முன்பான இறுதிப்பட்டியலில் சேர்க்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# மலிங்கவுக்கு இறுதி எச்சரிக்கை

இலங்கை ரி -20 அணி மோசமாக விளையாடி வருவதின் மூலம், அணியால் இனி மலிங்கவின் தலைமையின் கீழ் முன்னேற முடியாது என்று கிரிக்கெட் அதிகாரிகள் அவருக்கு இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையின் ரி - 20 அணித் தலைவராக வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க இன்னும் சில நாள்கள் மட்டுமே நீடிப்பார் எனக் கூறப்படுகிறது.

கடந்த மாதம் இலங்கையின் இரண்டாவது நிலை அணி பாகிஸ்தானை ரி-20 தொடரில் 3-0 என வெள்ளையடிப்புச் செய்தது. இதன் மூலம் 2020 ஆண்டு நடைபெறவுள்ள டி-20 உலகக் கிண்ணத் துக்கு முன் இலங்கைக்குப் புதிய நம்பிக்கை பிறந்தது.

ஆனால், கடந்த வாரம் ஆஸ்திரேலியாவில் ரி-20 தொடரில் 3-0 என இலங்கை வெள்ளையடிப்புக்கு உள்ளானதால் தற்போது நம்பிக்கை இழந்துள்ளது.

பாகிஸ்தானில் இலங்கை அணியை மிகச்சிறப்பாக வழிநடத்திய தசுன் சானகாவின் தலைமைத்துவத் திறமை பாராட்டுக்குரியது, மேலும், ரி-20 அணித்தலைவர் பதிவியை அவரிடம் ஒப்படைக்குமாறு தேர்வாளர்கள் வலியுறுத்தப்பட்டனர்.

இருப்பினும், கடுமையாக விமர்சிக்கப்பட்ட தேசிய தேர்வுக் குழு மாற்றத்தை எதிர்த்தது. மற்றும் மலிங்க மீது நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால் அணியின் செயல்திறன் தொடர்ந்து குறைந்தது.

இது தொடர்பாக அதிகாரிகள் மலிங்கவுடன் பேசினர் எனவும், வரவிருக்கும் மாற்றம் குறித்து அவருக்கு அறிவித்தனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மலிங்கவின் தலைவர் பதவிக்கு உடனடி அச்சுறுத்தல் எதுவும் இல்லை, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியாவில் நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர்களுக்கு அவர் தலைவராக நியமிக்கப்படுவார். இருப்பினும், அவர் தொடர்ந்து அணியை வழிநடத்துவார் என்பதில் எந்த உத்தரவாதமும் இல்லை எனக் கூறப்படுகிறது.

அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறும் ரி-20 உலகக்கிண்ணத்துக்கு முன்னர் ரி -20 களில் இருந்து ஓய்வு பெறுவதாக அச்சுறுத்தியதால் அவரைத் தலைவர் பதவியில் இருந்து நீக்கத் தேர்வாளர்கள் தயக்கம் காட்டுவதாக கூறப்படுகிறது.

இருப்பினும், இப்போது அணியின் மோசமான செயல்திறன் மற்றும் தசுன் சானகாவின் எழுச்சியைத் தொடர்ந்து, தேர்வாளர்கள் தலைவரை மாற்ற உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



# பாபர் அசாம் தொடர்ந்து முதலிடம்

கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பாரத்துக் காத்திருந்த ரி - 20 துடுப்பாட்ட மற்றும் பந்துவீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதில் துடுப்பாட்ட தரவரிசைப் பட்டியலில், பாகிஸ்தானின் பாபர் அசாம் தொடர்ந்தும் 876 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கின்றார்.

ஆஸ்திரேலியாவின் ஆரோன் பின்ஞ், இரண்டு இடங்கள் ஏற்றம் கண்டு 807 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

நியூஸிலாந்து அணிக்கெதிரான ரி - 20 தொடரில்



சதம் அடித்து அசத்திய இங்கிலாந்து வீரர், டாவிட் மாலன் 782 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

நியூஸிலாந்தின் கொலின் முன்ரோ ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 778 புள்ளிகளுடன் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் கிளென் மக்ஸ்வெல், மூன்று இடங்கள் பின்தள்ளப்பட்டு 765 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் ஹஸ்ரதுல்லா சஸாய் ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 727 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தியாவின் ரோஹித் சர்மா 677 புள்ளிகளுடன் தொடர்ந்து ஏழாவது இடத்தில் நீடிக்கிறார்.

இந்தியாவின் லோகேஷ் ராகுல் ஓர் இடம் ஏற்றம் கண்டு 660 புள்ளிகளுடன் எட்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் ஒய்ன் மோர்கன், பத்து இடங்கள் முன்னேறி 652 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்தின் மார்டின் கப்டில் ஏழு இடங்கள் ஏற்றம் கண்டு 652 புள்ளிகளுடன் பத்தாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ரி - 20 பந்துவீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலில் ஆப்கானிஸ்தானின் ரஷித் கான் 757 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்தின் மிட்செல் சான்ட்னர் மூன்று இடங்கள் ஏற்றம் கண்டு 700 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

பாகிஸ்தானின் இமாட் வசிம், ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 686 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தை பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் ஆடம் செம்பா இரண்டு இடங்கள் ஏற்றம் கண்டு 678 புள்ளிகளுடன் நான்காவது இடத்தை பிடித்துள்ளார்.

பாகிஸ்தானின் சதாப் கான் ஓர் இடம் பின்தள்ளப்பட்டு 673 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் என்டில் பெலுக்வாயோ, ஒரு இடம் ஏற்றம் கண்டு 668 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தை பிடித்துள்ளார்.

இங்கிலாந்தின் அடில் ராஷித், நான்கு இடங்கள் பின்தள்ளப்பட்டு 660 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தை பிடித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் முஜிப் உர் ரஹ்மான் 652 புள்ளிகளுடன் தொடர்ந்தும் எட்டாவது இடத்தில் உள்ளார்.

ஆஸ்திரேலியாவின் ஆஷ்டன் அகர், 57 இடங்கள் ஏற்றம் கண்டு 642 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தை பிடித்துள்ளார்.

இங்கிலாந்தின் கிறிஸ் ஜோர்தான் ஒரு இடம் ஏற்றம் கண்டு 640 புள்ளிகளுடன் பத்தாவது இடத்தை பிடித்துள்ளார்.



# முள்ளிவாய்க்காலை விட மோசமான நிலை கோட்டாபய ஆட்சிக்கு வந்தால் உருவாகும்

## வவுனியாவில் விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு

வவுனியா, நவ. 14

கோட்டாபய ஆட்சிக்கு வந்தால் முள்ளியவாய்க் காலை விட மோசமான நிலை உருவாகும். மீண்டும் எமது இளைஞர், யுவதிகள் சிறைக்குச் செல்லவேண்டிய நிலை வரும். வெள்ளைவான் கலாசாரம் வரும். கிறீஸ் பூதம் வரும். வாள்வெட்டுக் கலாசாரம் வரும். பள்ளி வாசல்கள், ஆலயங்கள் உடைக்கப்படும் எனக் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா, குடியிருப்பு கலாசார மண்டபத்தில் புதிய ஜனநாயக முன்னனியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 5 வருடத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசால் வடக்கில் 25 ஆயிரம் வேலைவாய்ப்புக்கள் இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடந்த 30 வருடகாலமாக யுத்தத்திற்கு முகம் கொடுத்த தமிழ் பேசும் மக்கள் பல்வேறு பிரசசிசனைகளை எதிர்நோக்குகின்றனர். போரை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னைய அரசு தமிழ் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்கள், பெண்களுக்கான வாழ்வாதார உதவிகள், அபிவிருத்திகள் எதையும் முன்னெடுக்கவில்லை. போரை முடித்த அரசு வடக்கு, கிழக்கைக் காட்டி சர்வதேசத்திடம் நிதிகளைப் பெற்று வடக்கு, கிழக்கு தவிர்ந்து ஏனைய 7 மாகாணங்களை அபிவிருத்தி செய்த வரலாறு தான் உள்ளது.

ஆனால், ஆட்சி மாற்றத்தின் ஊடாக ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி அரசால் முதலில் கொழும்பு காலிமுகத்திடலில் முதன்முதலாக தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளது. தேசிய கீதமானது மாற்று மொழியில் பாடும் வரலாறுதான் இருந்து வந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் அதை மாற்றியமைத்தோம். கடந்த 25, 30 வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 75 வீதமான காணிகளை வடக்கு – கிழக்குப் பகுதிகளில் விடுவித்துள்ளோம். வலி.வடக்கு பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தில் 5000 ஏக்கர் காணிகளை மக்களிடம் கையளித்தோம். மீள்குடியேற்ற அமைச்சு, கல்வி அமைச்சு, வீடமைப்பு அமைச்சு ஊடாக பல வேலைத்திட்டங்களை உருவாக்கியுள்ளோம். வடக்கு – கிழக்கு பகுதிகளில் மாகாணசபைக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு அதிக நிதி வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு பல வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வடக்கு – கிழக்கு பகுதிகளில் 2500 உடற்பயிற்சி ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் ஊடாக நியமிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகம் மற்றும் கல்வியற் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் மாணவர் தொகையை இரண்டு மடங்காக அதிகரித்திருக்கின்றோம். சாதாரண தரம் கற்று விட்டு உயர்தரம் கற்க முடியாத மாணவர்களுக்காக 13 ஆம் தரக் கல்விக்காக 26 கற்கைநெறிகளை ஆரம்பித்துள்ளோம்.

வடக்கு – கிழக்கில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 90 ஆயிரம் பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள், 12 ஆயிரம் முன்னாள் போராளிகள், 50 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள், பெற்றோரை இழந்து அநாதை இல்லத்தில் 6 ஆயிரம் சிறார்கள் இருக்கிறார்கள். கடந்த கால அரசு இவர்களுக்கு எந்தவித தீர்வையும் வழங்கவில்லை. வரவு – செலவுத் திட்டத்தில் இவர்களுக்கான நிதியை எமது அரசு ஒதுக்கியுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் இவ்வாறான பாதிப்புக்கள் இருக்கின்றன என்பது சர்வதேசத்துக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டுமானால் எமது வாக்கை நாங்கள் வழங்க வேண்டும். கடந்த கால அரசு ஆட்சிக்கு வந்தால் முள்ளியவாய்க்காலை விட மோசமான நிலை உருவாகும் – என்றார்.

இந்த நிகழ்வில் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தாயார் ஹேமா பிரேமதாஸ உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ – 100)

# இந்திய சுற்றுலாத்துறை பிரதிநிதிகளுக்கும் வடக்கு ஆளுநருக்கும் இடையில் சந்திப்பு

சென்னை, நவ. 14

சென்னைக்கு இரண்டு நாள்கள் பயணம் மேற்கொண்டுள்ள வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இந்தியப் பயண முகவர் சங்கத்தின் அகில இந்திய மற்றும் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் சென்னையில் இடம் பெற்றது.

41 வருடங்களுக்கு பின்னர் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தற்போது உருவாக்கப்பட்டுள்ளதுடன்,சென்னைக்கான விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்குமாகாணத்தின் சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் சுற்றுலாத் துறையில் ஆர்வத்துடன் செயற்பட்டுவரும் இந்திய பயண முகவர் சங்கத்தின் பிரதிநிதிகளை வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை வளர்ப்பதற்கு உதவுமாறு ஆளுநர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

தமிழ் நாட்டிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் சுற்றுலாப்பயணிகளை சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வருவது தொடர்பிலும், சுற்றுலாத்துறை மற்றும் கலாசார சமய இடங்களை இனங்காணுவது தொடர்பிலும் கவனம் செலுத்துவதாகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேலும், இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாணம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டு இது தொடர்பில் ஆராய்வதற்கான தூதுக்குழு ஒன்றினை வடக்கு மாகாணத்திற்கு வருமாறு ஆளுநர் இதன்போது அழைப்பு விடுத்தார். (ஐ)



# ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரும் விழிப்புணர்வுப் பயணம் யாழ். நகரில்



யாழ்ப்பாணம், நவ. 14

கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழ்.ஊடக அமையத்தால் முன்னெடுக்கப்பட்டுவந்த விழிப்புணர்வுப் பயணம் நேற்று இறுதி நாளாகவும் யாழ். நகரில் நடைபெற்றது.

நவம்பவர் மாதம் 2 ஆம் திகதி ஊடகவியலாளர்களுக்கு எதிராக குற்றமிழைத்தோரைத் தண்டனையிலிருந்து விடுவிப்பதை முடிவுக்குக் கொண்டு வரும் சர்வதேச தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இவ்விழிப்புணர்வுப் பயணம் நேற்றுப் புதன்கிழமை யாழ் நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட, காணாமல் போகச் செய்யப்பட்ட, சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட மற்றும் தாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களைப் பொது மக்களிடம் ஊடகவியலாளர்கள் கையளித்திருந்தனர்.

குறிப்பாக மின்சார நிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி ஆகியவற்றில் நடை பயணமாக சென்றும், யாழ்.பிரதான பஸ்நிலையம், சந்தை, வியாபார நிலையங்களுக்கும் சென்ற ஊடகவியலாளர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களை மக்ககளிடம் கையளித்தனர்.

இந்த விழிப்புணர்வுப் பயணத்தின் போது தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# விகாரைக்குள் விநியோகிக்கப்பட்ட கோட்டாபயவின் விஞ்ஞாபனங்கள்!

கொழும்பு, நவ. 14

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனங்களை அமைச்சிற்குரிய தபால் ஒதுக்கீட்டில் பொதுமக்களுக்கு அனுப்பி வைத்த அமைச்சர் ஒருவர் தொடர்பான விசாரணையைக் கண்டி தேர்தல் அலுவலகம் விசாரணை செய்து வருகிறது.

தனக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக, பொதுமகன் ஒருவர் அளித்த புகாரின் அடிப்படையில் இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன்படி, அனுப்பப்பட்ட 5000 கடிதங்களுக்கான தபால் செலவைச் செலுத்துமாறு அமைச்சருக்கு, அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் சட்டங்களின்படி இது குற்றமான விடயமாகும்.

இதேவேளை, நேற்று முன் தினம் பௌர்ணமி தினத்தில் பல விகாரைகளில் இடம்பெற்ற பிரசங்கங்களின் இடையில் கோட்டாபயவின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இது குறித்தும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

இது குறித்து விசாரணை நடத்தும்படி, பொலிஸாருக்கு அறிவித்துள்ளது தேர்தல் ஆணைக்குழு. (ஐ)

# கோட்டா மீது சேறு பூசும் நடவழிக்கையில் எதிரணி

## மஸ்தான் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 14

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் காலத்திலும் வெள்ளை வான் கடத்தல் மற்றும் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷ மீது சேறு பூசும் நடவடிக்கையை எதிரணியினர் மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் தங்களது தோல்வியைத் தாங்கமுடியாமல் மன விரக்தியில் உள்ள நிலையிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர்.



தற்போது வெள்ளை வான் தொடர்பாக ஒரு பிரச்சினையை கிளப்பியுள்ளனர். இவ்வளவு நாளும் யாருடைய ஆட்சி இடம்பெற்றது? குறித்த நபரிடம் வாக்கு மூலத்தைப் பெற்று அவரை ஏன் கைது செய்யவில்லை?

கடத்திக் குளத்தில் போட்டார்களாம். ஆனால் எந்தக் குளம் என்று தெரியாது. இவை எல்லாம் பிழையான செயற்பாடாக அமைந்துள்ளமையுடன், கோட்டா மீது சேறு பூசி அவரது வெற்றி வாய்ப்பை மழுங்கடிக்கும் முயற்சியாகவே நான் பார்க்கிறேன் –என்றார். (ஐ)

# மிலேனியம் உடன்பாட்டுக்கு எதிரான வழக்கு அடுத்த வருடம் பரிசீலனைக்கு

கொழும்பு, நவ. 14

அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்துடனான உடன்பாட்டுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கு அடுத்த வருடம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

வெளிநாட்டு உடன்படிக்கை கையெழுத்திடுவதற்கு எதிராக இடைக்காலத்தடை உத்தரவு கோரி இந்த மனுக்கள் நேற்று 5 நீதியரசர்கள் கொண்ட அமர்வின் முன் விசாரணைக்கு வந்தது.

இதன்போது அந்த மனுக்களை எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக புவனேக அலுவிஹரே தலைமையிலான நீதியரசர்கள் தெரிவித்தனர்.

இந்த மாதம் முதலாம் திகதி மிலேனியம் சவால் உடன்பாட்டில் அரசு கையெழுத்திடுவதைத் தடுக்க நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனக் கோரி அகுலுகல்லே சிறி ஜினானந்த தேரர் மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழில் ரயிலுடன் மோதி இளம் குடும்பஸ்தர் சாவு!



யாழ்ப்பாணம், நவ. 14

யாழ்ப்பாணம் - நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ள ரயில் கடவையில் ரயிலுடன் மோதுண்டு இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - நாவலர் வீதியில் பொருளியல் கல்லூரிக்கு முன்பாகவுள்ள உணவகத்தின் உரிமையாளரான நிசாந்தன் (வயது - 31) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலுடன் சந்தையில் மீன் வாங்கிக் கொண்டு வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த உணவக உரிமையாளர் மோதி தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார். (ஐ -07)

# மெழுகு உருவ நூதனசாலையை திறந்து வைத்தார் மைத்திரிபால!



கொழும்பு, நவ. 14

பொலன்னறுவை புராதன தொழில்நுட்ப நூதனசாலையுடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மெழுகு உருவ நூதனசாலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் திறந்து வைத்தார்.

புதிய யுகத்திற்கேற்றவாறு நூதனத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி மனித இனத்தின் பண்டைய தொழிநுட்ப முறைகளைத் தற்போது வாழ்கின்ற மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும், இலங்கையின் புராதன தொழிநுட்பத்துடன் தொடர்புடைய தொல்லியல் பெறுமதிவாய்ந்த பொருள்களை சேகரித்து எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கும் நோக்கிலும் இந்த நூதனசாலை ஜனாதிபதியால் கடந்த ஜூலை மாதம் 03 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

நூதனசாலையின் விசேட பிரிவாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மெழுகு உருவ நூதனசாலையானது, ஜனாதிபதியால் நேற்று திறந்துவைக்கப்பட்டதுடன், இப்பிரிவில் சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கையில் ஆட்சிப் புரிந்த அரச தலைவர்களின் உருவங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவி காலத்தில் வெளிநாட்டு அரச தலைவர்களிடமிருந்து பெற்ற அன்பளிப்புகள், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை தேசிய நூதனசாலைகள் திணைக்களத் திடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், அந்தப் பொருள்களை காட்சிப்படுத்துவதற்காக பொலன்னறுவை தொழிநுட்ப நூதனசாலையில் நிர்மாணிக்கப்பட்ட பகுதியும் மக்களின் பார்வைக்காக ஜனாதிபதியால் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

வட மத்திய மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# விபத்தை அடுத்துத் தண்டவாளத்தை மறித்து மக்கள் நேற்று போராட்டம்!



யாழ்ப்பாணம், நவ. 14

ரயிலுடன் மோதுண்டு இளைஞன் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து ஏற்பட்ட களேபரத்தினால் யாழ் – காங்கேசன்துறை மார்க்கத்திலான ரயில் சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. நீண்ட இழுபறியின் பின்னரே ரயில் சேவை சீரடைந்தது.

நேற்றுக் காலை, காங்கேசன்துறை – கொழும்பு சேவையிலீடுபட்ட ரயில் யாழ்ப்பாணம் நீராவியடி, பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையைக் கடந்த சமயத்தில் பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முயன்ற இளம் குடும்பஸ்தர் ரயிலில் மோதுண்டு படுகாயமடைந்தார். அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார்.

சம்பவத்தையடுத்து, ஆத்திரமடைந்த ஊரவர்கள், ரயில் கடவைக்குக் குறுக்காகத் தடைகளை ஏற்படுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில் தொடரந்து பயணிக்க முடியாமல் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் ஸ்தம்பித்தது.

சம்பவ இடத்துக்கு ரயில்வே காவல் அதிகாரிகள் வந்து பொது மக்களுடன் பேச்சில் ஈடுபட்டனர். எனினும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பெருமளவு பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து, விசாரணைகளை மேற்கொண்டு, பொது மக்களை சமரசம் செய்து வைத்தனர். பொலிஸாரின் தலையீட்டை அடுத்து இரண்டரை மணி நேர இழுபறி முடிவுக்கு வந்தது.





# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 1 - 30, 2019

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல, தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**



மாண்ட வீரர் கனவு பலிக்க
மழையின் பொழிவில் தமிழ் மண் குளிக்க...

ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

TAMIL NATIONAL GREEN ORGANIZATION


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2019 இல் வெளியிடப்பெற்றது.







## பனியால் ஓடுபாதையில் இருந்து விலகி ஓடிய பயணிகள் விமானம்

அமெரிக்காவின் சிக்காகோவில் கடும் பனி காரணமாக ஓடு பாதையில் இருந்து விமானம் விலகியதால், பயணிகள் அச்சத்தில் அலறினர்.

அமெரிக்காவில் தற்போது நிலவும் குளிர்காலம் காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிக அளவில் பனிப்பொழிவு காணப்படுகிறது.



இந்நிலையில் 38 பயணிகளுடன் க்ரீன்ஸ் போரோ விலிருந்து புறப்பட்ட விமானம் ஒன்று, சிகாகோவின் சர்வதேச விமான நிலையத்தில் தரை யிறங்கும்போது பனியால் விமானத்தின் ஓடுபாதையில் இருந்து சறுக்கி விலகியது. இதனால் பயணிகள் அச்சத்தில் அலறினர்.

பின்பு விமானத்தின் இறக்கை தரையில் மோதியதை அடுத்து ஒருவழியாக விமானம் நின்றது. இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாகப் பய ணிகள் யாருக்கும் எந்த காயங்களும் ஏற்படவில்லை. இதைத் தொடர்ந்து கடும் பனி பொழிவு காரணமாக, சிகாகோவில் இருந்து புறப்பட இருந்த 1,200 விமா னங்கள் நேற்றுமுன்தினம் ரத்து செய் யப்பட்டுள்ளன.

## வரலாறு காணாத மழை இத்தாலியில் பொழிவு!

எழில் மிகுந்த இத்தாலியின் வெனிஸ் நகரை இரண்டா வது முறையாக அடை மழை தாக்கியுள்ளது. சுற்றுலா பயணிகள் அதிகம் வந்து செல்லும் லாகூன் நகரில் கன மழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு வரை 187 சென்டி மீட்டர் மழை பதிவான நிலையில், புனித மார்க் சதுக்கம், பெசிலிக்கா தேவாலயம், குடியிருப்பு பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மேலும் கனமழை பொழிவால் பெரும் பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளது. இதனால் பேரழிவு கால அவசர நிலையை அறிவிக்க உள்ளதாக தெரிவித்துள்ள நகர மேயர் Luigi Brugnaro, அரசிடம் இருந்து நிதி உதவி கோரவுள்ளதா கவும் தெரிவித்துள்ளார்.

## அம்புகளில் தீ வைத்து பொலிஸாரை நோக்கி எய்யும் போராட்டக்காரர்கள்

ஹொங்கொங்கில் தொடர்ந்து நடந்து வரும் போராட்டத்தில் அடுத் தடுத்து வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் சீன அரசு கவலையடைந்துள்ளது.

கிரிமினல் குற்றவாளிகளை சீனாவுக்கு அழைத்துச் சென்று விசாரிக்கும் நடைமுறைக்கு எதிர்ப் புத் தெரிவித்து ஆரம்பித்த இந்த எதிர்ப்பு நடவடிக்கை கடந்த சில மாதங்களாகத் தொடர் போராட்டமாக நீடித்து வரு கிறது.

கண்ணீர்ப்புகைகுண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு என வன்முறை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள் ளது.


இந்நிலையில் பொலிஸாரின் தாக்குதலுக்கு பயந்து போராட்டக் காரர்கள் வில் அம்புகளில் தீவைத்து எய்து விடுவதும், பொலிஸாரின் மீது பெட்ரோல் குண்டு வீசுவதும் தொடர்கதையாகி வருவதால் சீன அரசு கவலையடைந்துள்ளது.



## சூரியனின் பின்புலத்தில் புதன் கிரகத்தின் நகர்வு

### நாசா வெளியிட்ட அபூர்வ காட்சி

பூமியிலிருந்து நோக்கும் போது புதன் கிரகம் சூரியனைக் கடந்து செல் லும் அரிய காட்சியை அமெரிக்க விண்



வெளி ஆய்வு மையமான நாசா வெளி யிட்டுள்ளது.

சூரியனை நேர்கோட்டில் கடக்கும் போது சிறிய அளவிலான கரும்புள்ளி போல புதன் கிரகம் காட்சி அளித்தது. இந்த அரிய நிகழ்வு ஒரு நூற்றாண் டில் 13 முறை மட்டுமே நிகழும் என்பது குறிப்பிடத்தக்கது.

புதன் கிரகம் சூரியனைக் கடந்து செல்லும் போது, புத னின் விட்டம் சூரியனை விடவும் சிறி யதாக இருப்பதால் இந்த நிகழ்வு கரும்புள்ளியாக மட் டுமே காட்சி அளித்தது.

இந்தியாவில் கடந்த 1999, 2003, 2006, 2016 ஆண்டு களுக்கு பிறகு இந்த அரிய நிகழ்வை திங்களன்று இடம் பெற்றது. அடுத்த நிகழ்வை வரும் 2032ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதிதான் காணமுடியும் என வானி யல் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

## கட்டுக்கட்டாகக் கள்ளநோட்டுகள் பறிமுதல்

தெலங்கானாவில் சிக்கிய கள்ள நோட்டு கும்பலிடம் இருந்து சுமார் 100 கோடி ரூபா மதிப்புள்ள கள்ள நோட்டுகள் கத்தை கத்தையாக பறி முதல் செய்யப்பட்டுள்ளன

கம்மம் மாவட்டம் சத்திப்பள்ளி



பகுதியை சேர்ந்த மாதர் என்பவன் தலைமையிலான கும்பல், 80 லட் சம் ரூபாய் கொடுத்தால், அதற்குப் பதிலாக ஒரு கோடி ரூபாய் தருவதாக கூறிப் பலரிடம் மோசடி செய்துள்ளது.

ஒரு கோடி ரூபாய்க்கு உண்மை யான ரூபாய் நோட்டுகளை தருவதாக கூறிவிட்டு, பணக்கட்டுகளுக்கு மேலேயும் கீழேயும் மட்டும் உண்மை யான ரூபாய் நோட்டுகளை வைத்து இடையில் கள்ள நோட்டுகள் மற் றும் வெற்றுக் காகிதங்களை வைத்து கொடுத்து மோசடி செய்துள்ளது. ஏமாற்றப்பட்டவர்கள் யாரும் காவல் துறையினரை நாடாத நிலையில் ஒருவர் மட்டும் புகார் செய்திருக்கிறார்.

அவரிடம் தகவல்களை பெற்ற அம்மாநில பொலிஸார் மாதர் என்பவனையும், அவனது கூட்டா ளிகள் ஆறு பேரையும் கைது செய் தனர். விசாரணை நடத்திய பொழுது அவர்கள் கள்ளநோட்டுகளை அச் சடித்துப் புகழகத்தில் விட்டு வந்த மையும் தெரிய வந்தது. கள்ள நோட்டுகளை அச்சடித்து வந்த வீட்டில் இருந்து 7 கோடி ரூபாய் அளவிற்கு கள்ளநோட்டுகள் முத லில் கைப்பற்றப்பட்டன.

## ஆஸ்திரேலியக் காட்டுத் தீயினால் சாம்பியன்ஷிப் கார் பந்தயம் ரத்து!

ஆஸ்திரேலியாவின் பல இடங் களில் பற்றியும் எரியும் காட்டுத்தீயால் இன்று முதல் அங்கு நடைபெற இருந்த உலக சாம்பியன்ஷிப் கார் பந்தயம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் கிழக்கு பகுதியில் இன்று 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடக்க இருந்த உலக சாம்பியன்ஷிப் கார் பந்தயத்தின் இறுதிப் போட்டிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

காட்டுத்தீயின் தாக்கம் அதிக மாக உள்ளதால் பங்கேற்பவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பைக் கருத் தில் கொண்டு போட்டி கைவிடப்பட் டுள்ளதாக பந்தயம் நடத்தும் நிறுவ னம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் நடப்பு சாம்பியனான டொயோட்டாவை விட 18 புள்ளிகள் முன்னிலை வகிக்கும் ஹூண்டாய், உற்பத்தியாளர் பட் டத்தை பெறும் என எதிர்பார்க்கப்படு கிறது.

அதே போல் டொயோட்டாவின் ஓட்டுநர் ஓட் தனக் (Ott Tanak) என் பவருக்கு ஓட்டுநர்களுக்கான சாம் பியன்ஷிப் பட்டம் உறுதி செய்யப்பட் டுள்ளது.

